

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 மார்ச் 4, 2010 புரட்சி 9 முழக்கம் 8 விலை: ரூ.2.50


## விளக்கவுரை : விவாதம் : வினாக்கள்

# கருத்து மணம் பரப்பிய கழக பயிற்சி முகாம்


சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் - பிப்.27, 28 தேதிகளில் பெரியாரியல் பயிற்சி முகாமை சிறப்புடன் நடத்தியது. காஞ்சிபுரத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மேல்கதிர்பூர் என்னும் கிராமத்தில், காஞ்சி மக்கள் மன்றத்தின் பயிற்சி மய்யத்தில், கிராமச் சூழலில் இந்த முகாம் நடைபெற்றது. பயிற்சி வகுப்புகள் திட்டமிட்டபடி குறித்த நேரத்தில் தொடங்கப்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு 26 ஆம் தேதி மாலையே பயிற்சி பெறக் கூடிய 120 தோழர்கள் தனி வேன்களில் இராயப்பேட்டை கழக அலுவலகத்திலிருந்து காஞ்சிபுரம் பயணமானார்கள். 27 ஆம் தேதி காலை 9 மணியளவில் திட்டமிட்டபடி வகுப்புகள் தொடங்கின. காஞ்சி மக்கள் மன்றத்தின் பொறுப்பாளரும், பயிற்சிக்கு பெருமளவில் உதவியாக இருந்தவருமான தோழர் மகேசு முகாமைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

தொடர்ந்து - தோழர் சிற்பிராசன், 'புராணங்கள்' எனும் தலைப்பில் விரிவாகக் கருத்துகளை முன்வைத்து, கடவுள் ஆபாசங்களோடு மூடநம்பிக்கைகள் பிரிக்க முடியாமல் பிணைந்து கிடப்பதை நகைச்சுவையோடு எடுத்துரைத்தார். 11 மணியளவில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'பெரியாருக்கு முன்னும் பின்னும்' எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். பெரியாருக்கு முந்தைய காலத்தில் சமூகத்தின் நிலை, தமிழ் மன்னர்கள் ஆட்சியில் பார்ப்பனியம் தலைவிரித்தாடிய வரலாறு, சாதிக் கட்டமைப்பு, மனுதர்மத்தின் அடிப்படையில் கோலோச்சிய கொடுமை, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் மனுதர்மமே சட்டமாக இருந்த நிலை, பெரியார் இயக்கம் தொடங்கப்பட்ட சமூகச் சூழல், சுயமரியாதை இயக்கத்தின் போராட்டங்கள், பெரியார் இயக்கத்தால் சமுகத்தில் தொடங்கிய மாற்றங்கள் பற்றிய விளக்கங்களோடு, பெரியார் இயக்கத்துக்கு எதிராக முன் வைக்கப்படும் வாதங்களைத் தொகுத்து, அதற்கான விளக்கங்களையும் அளித்தார். 3 மணி நேரம் வகுப்பு நீடித்தது.

மதிய உணவுக்குப் பிறகு 3.30 மணியளவில் எழுத்தாளர், கவிஞர் அழகிய பெரியவன், 'அம்பேத்கரும் சாதி ஒழிப்பும்' எனும் தலைப்பில் விரிவாகப் பேசினார். புத்தர் இயக்கம் உருவாக்கிய மறுமலர்ச்சி; மனுதர்மம் உருவான காலகட்டம், அம்பேத்கரின் சாதி பற்றிய விளக்கங்கள், இந்துத்துவத்துக்கு புதிய விளக்கங்களைத் தந்து, பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடிக்கும் ஜெயமோகன், சுஜாதாவின் எழுத்துகள், சாதி ஒழிப்புக்கு அம்பேத்கர் முன் வைத்த தீர்வுகள் பற்றி விரிவாக விளக்கமளித்தார்.

தேனீர் இடைவேளைக்குப் பிறகு பயிற்சிக்கு வந்த தோழர்கள், தோழியர்கள் பங்கேற்ற குழு விளையாட்டு, பயிற்சி அரங்கத்துக்கு வெளியே உள்ள மைதானத்தில் 'கலகலப்பாக' நடந்தது. சூலூர் கழகத் தோழர் வீரமணி நடுவராக இருந்து விளையாட்டுகளை வழி நடத்தினார்.

மாலை 6 மணியளவில் மீண்டும் வகுப்புகள் தொடங்கின. கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, 'பெரியார் கண்ட களங்கள்' எனும் தலைப்பில் போராட்ட வரலாறுகளை விரிவாக எடுத்து விளக்கினார். வைக்கம் போராட்டத்தில் தொடங்கி, குருகுலப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம், வகுப்புரிமைக்கான போராட்டம், குலக் கல்வித் திட்ட எதிர்ப்பு, விநாயகன் சிலை உடைப்பு, இராமன் பட எரிப்பு, இந்திய தேசியப் பட எரிப்பு (தமிழ்நாடு நீங்கலாக) போரட்டங்களிலிருந்து, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் போராட்ட அறிவிப்பை பெரியார் வெளியிட்ட வரை - விரிவாக எடுத்துரைத்தார். இரவு 9 மணி வரை 3 மணி நேரம் வகுப்பு நடந்தது. இரவு உணவுக்குப் பிறகு குறும்படங்கள் திரையிடப்பட்டன.



இரண்டாவது நாள் வகுப்பு - காலை 9 மணியளவில் தோழர் சிற்பி ராசன், 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது. 10 மணியளவில் பேராசிரியர் சரசுவதி, 'பெரியாரும் பெண்ணுரிமையும்' எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். வரலாறுகளில் பெண் அடிமையாக்கப்பட்ட கால கட்டம். அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பெண்களை அடக்கிய ஆண்கள் வர்க்கம்; பெண்ணடிமையை உறுதி செய்த குடும்பம் என்ற நிறுவனம், பெரியார் வலியுறுத்திய பெண்ணுரிமை கோட்பாடுகளை விளக்கிப் பேசினார். ஒன்றரை மணி நேரம் 'கலகலப்பாக' வகுப்பு நடந்தது. தேனீர் இடைவேளையைத் தொடர்ந்து, 'கடவுள் மறுப்பு ஏன்?' என்ற தலைப்பில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் விரிவாக வகுப்பு எடுத்தார். பார்ப்பன உயர்வை நிலைநிறுத்த உருவாக்கப்பட்ட கடவுள்கள், பக்தர்களின் கடவுள் நம்பிக்கையில் நிலவும் முரண்பாடுகள், மூடத்தனம், பக்தியினால் தமிழர் சமுதாயம் அடையும் இழிவுகளை விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து - கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'பெரியார் பார்வையில் திராவிடமும் தமிழ் தேசியமும்' எனும் தலைப்பில் விரிவாக வகுப்பு எடுத்தார். ஆரியர் பண்பாட்டு படையெடுப்பிலிருந்து, தமிழர்களை மீட்டெடுக்க, பெரியார் 'திராவிடர்' என்ற அடையாளத்தை முன்னிறுத்தியதையும், இதற்கு மாற்றாக ஆரிய எதிர்ப்பு குறிச் சொல் வேறு ஏதாவது இருந்தால் ஏற்கத் தயாராக இருப்பதாக பெரியார் கூறியதையும் எடுத்துக் காட்டி, பெரியார் தமிழர்களின் இழிவு ஒழிப்புக்கும், விடுதலைக்குமே போராடிய தலைவர் என்பதற்கான சான்றுகளை எடுத்துக் காட்டியும், 'திராவிட' எதிர்ப்பாளர்கள், முன் வைக்கும் போலி வாதங்களுக்கு தக்க பதிலளித்தும் கழகத் தலைவர் பேசினார்.

இரண்டு மணிக்கு மதிய உணவு - மாட்டிறைச்சியுடன் வழங்கப்பட்டது. 3 மணியளவில் மருத்துவர் எழிலன் உயிரின் தோற்றம், மூட நம்பிக்கைகள் எனும் தலைப்பில் - படக்காட்சிகளுடன் வகுப்பு எடுத்தார். பெருவெடிப்புக் கொள்கை, உயிரின் தோற்றம், மனிதனின் பரிணாம வளர்ச்சியை விளக்கிப் பேசினார். அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா' வெளியிட்ட படங்களைப் பயன்படுத்தி, விளக்கமளித்தார். கடவுள்கள் - மதங்கள் மதவாதிகளின் கற்பனை; விஞ்ஞான ஆய்வில் கடவுள் என்று ஒன்றே இல்லை என்பதை விளக்கினார்.

தொடர்ந்து, கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், 'கழகம் கண்ட களங்கள்' எனும் தலைப்பில், சாதி ஒழிப்பில், சமூக நீதியில், பார்ப்பன எதிர்ப்பில், பெண்ணுரிமையில் - மலையாளிகள், வடநாட்டுக்காரர்கள் ஆதிக்க எதிர்ப்பில், ஈழத் தமிழர் விடுதலையில், கழகம் நடத்திய போராட்டங்களையும், அதற்குத் தந்த விலையையும் விரிவாக விளக்கினார்.

நிறைவாக - மூத்த வழக்கறிஞர் துரைசாமி, முகாமை நிறைவு செய்து உரையாற்றினார். கழகம் நடத்திய போராட்டங்களைத் தொகுத்து நூலாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தார். மாவட்ட தலைவர் தபசி. குமரன் நன்றி கூறி, பயிற்சி முகாமின் வரவு செலவு கணக்குகளை அறிவித்தார். இரண்டு நாள் நிகழ்ச்சிகளையும், மாவட்ட கழகப் பொறுப்பாளர் அன்பு தனசேகர், இளைய சிம்மன் ஆகியோர் தொகுத்து வழங்கினர். 120 தோழர்கள் முகாமில் பங்கேற்றனர். இதில் 25 பேர் பெண்கள்.

(4 ஆம் பக்கம்)

தலையங்கம்

## அன்று பெரியார் கூறினார்: இன்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்

*இந்திய தேசியம் (அனைத்துப் பிரிவினரையும்) உள்ளடக்கியதா? (“Was Indian Nationalism inclusive?) என்ற தலைப்பில், சீரிய சமூக ஆய்வாளர் கே.என்.பணிக்கர் எழுதிய கட்டுரை ஒன்று ‘இந்து’ நாளேட்டில் (பிப்.23, 2010) வெளிவந்துள்ளது.*

*இந்திய விடுதலைப்போராட்டத்தின் மிகப் பெரும் பலவீனம் – சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டு, ஒதுக்கி வைக்கப்பட்ட பிரிவினருக்கான தீவிர செயல் திட்டங்கள் எதையும் இணைத்துக் கொள்ளாததுதான் என்று, கே.என்.பணிக்கர், அக்கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார். கீழ்க் கண்ட கருத்துகளையும் அக்கட்டுரை முன் வைத்துள்ளது.*

*நாட்டின் வளர்ச்சிகளோடு இணைந்து வர முடியாது ஒதுக்கியே நிறுத்தப்பட்டுள்ள பிரிவினரை பொது நீரோட்டத்துக்கு கொண்டு வரும் வகையில் 11 ஆவது திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்ட பிரிவினர் நாட்டின் வளர்ச்சி நீரோட்டத்தில் இணையாமல், ஒதுங்கியே நிற்கிறார்கள் என்பதை அரசே, இதன் மூலம் ஒப்புக் கொண்டுள்ளது. காலனியத்துக்கும், மக்களுக்கும் உள்ள பரிமாற்ற உறவுகளை தொலைநோக்குப் பார்வையில் ஆராய்ந்து, பல்வேறு சமூகப் பிரிவுகளையும், கவனத்தில் கொண்டு, அவைகளுக்கிடையிலான வேறுபாடுகளைகளையும் முயற்சிகளே இந்தியச் சூழலில் ‘தேசியம்’ என்பதற்கான உண்மையான அர்த்தமாக இருக்க முடியும். காலனிய காலத்தின் முதன்மையான முரண்பாடாக – சாதி, தீண்டாமை, வகுப்பு பிரச்சினைகளே இருந்தன. இந்த நிலையில் சுதந்திரம் பெற வேண்டும் என்ற ஒற்றை முழக்கத்தோடு எல்லைகளை வகுக்காமல், சாதி மதப் பகைமை இல்லாத ஒரு புதிய சமூகத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற பார்வையும், சுதந்திரப் போராட்டத்தோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஆய்வாளர் பணிக்கர் சுட்டிக்காட்டியிருக்கிறார். தேசியத்தை ‘சுதந்திரம்’ என்ற குறுகிய எல்லையில் வரையறுத்துக் கொண்ட காரணத்தினால்தான், உயர்சாதி – மேல்தட்டு வர்க்கத்தின் ஆதிக்கம் இன்றளவும் தொடருகிறது என்று சுட்டிக்காட்டும் அந்த ஆய்வாளர், சமூகநீதி கோரிக்கைகளை முன் வைத்து, பெரியார், அம்பேத்கர், பூலே போன்ற சிந்தனையாளர்கள், சுதந்திரப் போராட்ட காலத்திலேயே இயக்கம் நடத்தியதையும் சுட்டிக்காட்டுகிறார்.*

*காங்கிரஸ் கட்சியில் இருந்த பெரியார், அக்கட்சி அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை வலியுறுத்தினார். காங்கிரசின் பார்ப்பனத் தலைமை அதை புறந்தள்ளியது. சுதந்திரம் என்ற பெயரில் ஆட்சி அதிகாரம், பார்ப்பன – பனியாவின் கரங்களிடம் சென்றடைந்தது. இந்திய ஆட்சி – அரசு நிறுவனங்கள் – பார்ப்பனியத்தின் குணாம்சங்களை உள்வாங்கிக் கொண்டன. இந்தியாவில் மத்தியில் ஆட்சி மாறினாலும் ஆளும் வர்க்கத்தின் கோட்பாடாக பார்ப்பனியமே மேலோங்கி நிற்கிறது. சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்கள் – ‘சூத்திர’ இழிவுக்கும், சாதிய ஒடுக்குமுறைக்கும் உள்ளாகி, நாட்டின் வளர்ச்சிப் பாதையில் புறந்தள்ளப்பட்டுக் கிடக்கிறார்கள்.*

*பெரியார், அன்று ‘சுதந்திரம்’ என்ற பெயரில் நடந்த போராட்டத்தைக் கடுமையாக சமூகப் பார்வையில் விமர்சனம் செய்து வந்தபோது, ‘தேசத் துரோகி’ என்றும், ‘பிரிட்டிஷ் விசுவாசி’ என்றும், ‘வகுப்புவாதி’ என்றும் பார்ப்பன ஏடுகள், பார்ப்பனர்கள் திட்டமிட்டு, அவதூறுகளை அள்ளி வீசினர். அன்று பெரியார் முன் வைத்த கருத்துகள், சமூகப் பார்வையில் மிகச் சரியானவை என்பதையே இன்று ஆய்வாளர்கள் வெளியிடும் கருத்துகள் உறுதிப்படுத்துகின்றன.*

# வகுப்புரிமை கேட்பது தவறா?

*‘தேசியம்’ என்றால், அது அனைத்துப் பிரிவினரும் உரிமை வழங்கக்கூடிய கொள்கைகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று சமூக ஆய்வாளர் கே.என். பணிக்கர், இப்போது எழுதியிருக்கும் கருத்தை, பெரியார், 1931 ஆம் ஆண்டிலேயே முன் மொழிந்து எழுதிய கட்டுரை.*

இந்தியர்களின் அடிமைத்தன்மைக்கும், இழி நிலைக்கும், மதமும், சாதியும், வகுப்பும் அவை சம்பந்தமான மூடநம்பிக்கை எண்ணங்களும், வெறிகளும், சடங்குகளும் இவற்றிற்காக ஒருவரை ஒருவர் அவநம்பிக்கை கொண்டு அடக்கி ஆள நினைப்பதுமே முக்கியமான காரணங்களாகும். இதன் காரணமாய் மக்கள் வலுவிழந்து, சுயமரியாதையிழந்து, சுதந்திரமற்று, நடைப் பிணங்களாகவும் பகுத்தறிவற்ற மிருகத் தன்மையிலும் கேவலமாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

இதற்கு உதாரணமாக சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டால் சுமார் மூன்றே முக்கால் கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் 385 சாதிகளாகவும் மற்றும் பல உள்பிரிவு சாதிகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். நாளேற நாளேற நாகரிகத்தின் காரணமாகவும், செல்வ நிலையின் காரணமாகவும் இன்னும் அதிகமான சாதிப் பிரிவுகளும் ஏற்படும் நிலையிலேயே தேசம் போய்க் கொண்டிருக்கின்றதே தவிர, ஒன்றுபடத் தக்க முயற்சியோ அறிகுறியோ இல்லை.

இந்தியாவில் 8 இல் ஒரு பாகம் கொண்ட சென்னை மாகாணத்திலேயே 385 சாதிகள் என்றால், மீதி 7 பாக மக்கட் தொகையில் எத்தனை சாதிப் பிரிவுகள் இருக்கக் கூடும்?

இந்த சாதிப் பிரிவுகள் மாத்திரமல்லாமல் உயிரினும் தேசத்தினும், முக்கியமாய்க் கருத வேண்டியதான ‘தாய் பாஷை’ப் பிரிவுகள் எவ்வளவு?

இவ்வளவு சாதியும், தாய் பாஷையும் தங்களுக்குள் பிரிக்கப்பட்டு இருக்கின்றன என்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்காமல், தங்களுக்குள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற உள் எண்ணமும், வெளி நடவடிக்கைகளும், வெறுப்பும் துவேஷமும் எவ்வளவு?

இவற்றையெல்லாம் கவனிக்காமலும், இதை நேர்படுத்த முயற்சிக்காமலும் யாரோ சில சோம்பேறிகளும், சுயநலக்காரரும் தேசியம் என்று சொல்லி, மக்கள் கண்களில் மிளகாய்ப் பொடியைப் போட நினைத்தால், நாடு எப்படி க்ஷேமம் அடையும்? கொஞ்ச நாளைக்கு மாத்திரம்தான் இந்தத் தேசிய வயிற்றுப் பிழைப்பு, வியாபாரம், நடத்த முடியுமேயொழிய இது என்றும் நிலைத்திருக்க முடியாது.

வகுப்புவாதம் சொல்லக் கூடாது என்பதன் மூலம் ஏதோ சில பயங்காளிகளையும், வேறு வழியில் பிழைக்க வழியற்ற தேசியவாதிகளையும், உத்தியோகம் பதவிப் பிரியர்களையும் மிரட்டலாமேயொழிய, வகுப்புப் பிரிவுகளாலும் உயர்வு தாழ்வு வித்தியாசங்களாலும் உள்ள கஷ்டத்தையும் கேட்டையும் ஒழிக்க முடியுமா?

வகுப்புவாதம், மதவாதம், சாதிவாதம் பேசி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பவர்களால் தேசத்தின் விடுதலை கெட்டுப் போகின்றது என்று ‘திப்பிலி, தேசாரம், சதகுப்பை’ இவைகளெல்லாம் பேசவும் எழுதவும் தொடங்கிவிட்டதைக் கண்டு நாம் சிறிதும் இலட்சியம் செய்யவில்லை.

அந்தப்படி பேசும், எழுதும் யோக்கியர்களில் 100க்கு அரைப் பேராவது தங்கள் மதத்தையும், உள் மதத்தையும், சாதியையும், வகுப்பையும் விட்டு விட்டவர்கள் உண்டா என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றோம்.

ஆகவே தேசியம் என்பதும், தேசியப் பிழைப்பு என்பதும் மக்களை எவ்வளவு அயோக்கியர்களாகவும் செய்து விடுகிறது?

எப்பொழுது ஒருவனுக்கு, அவனுக்கு என்று மதம், ஒரு சாதி, தனி வகுப்பு என்பதாகப் பிரிக்கப்பட்டதோ, பின்பு அவன் தனது மதம், சாதி, வகுப்புக்கு என்று உரிமை கேட்டதில் என்ன தப்பிதமோ, அயோக்கியதனமோ இருக்க முடியும்?

வகுப்புவாதம், மதவாதம், சாதிவாதம் கூடாது என்கின்ற யோக்கியர்கள் ஒருவராவது மதத்தையும், சாதியையும், வகுப்பையும் அழிக்கச் சம்மதிக்கிறார்களா? அது மாத்திரமல்லாமல், பார்ப்பனர் முதல் பறையர் வரை அவரவர் வகுப்புக்கு உயிரை விட்டாவது காப்பாற்ற வேண்டும் என்கிறார்களே ஒழிய, ஒருவராவது சாதிமத வகுப்புகளைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்று சொல்லுகின்றவர்களைக் கண்டுபிடிக்க முடியுமா?

வகுப்பையும், மதத்தையும், சாதியையும் ஒருபுறம் காப்பாற்றிக் கொண்டு, மற்றொரு புறத்தில் சாதி, மத, வகுப்புப் பிரதிநிதித்துவம் கேட்பதை அயோக்கியத்தனம் என்று சொன்னால், அப்படிச் சொல்வது ஆயிரம் மடங்கு அயோக்கியத்தனமும், இரண்டாயிரம் மடங்கு இழிதன்மையும், வஞ்சகத் தன்மையும் துரோகத் தன்மையும் ஆகாதா என்பதோடு இது தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், வாழ்வுக்கும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கின்ற கீழ் மக்கள் தன்மையல்லவா அது?

தேசம், உயிரினங்களுக்குப் பொதுவானதாகும்; தேச ஆட்சியும் மக்களுக்குப் பொதுவானதாகும், எந்த மனிதனுக்கும் ஆட்சியில் அவனது இஷ்டத்தைத் தெரிவிக்கவும், ஆட்சியில் பங்கு பெறவும் உரிமை உண்டு என்பதை எந்த மூடனும் மறுக்க முடியாததாகும். ஏதோ சில வஞ்சகக் காரர்களது செல்வாக்குக் காலத்தில் அவர்களது ஏய்ப்பில் விழுந்த முட்டாள் மன்னர்களான, ஒழுக்க ஈனமுள்ள அரசர்கள் காலத்தில் ஏற்பட்ட அக்கிரமங்களாலும், கொடுங்கோன்மைகளாலும் சாதிமத வகுப்பு ஆணவங்கள் ஏற்பட்டு, ஒரு சாதி மத வகுப்பை, மற்றொரு சாதிமத வகுப்பு அடக்கி ஆளும்படியாகவும், ஒரு சாதி மத உழைப்பில் மற்றொரு சாதிமத வகுப்பு சோம்பேறியாய் இருந்துகொண்டு உண்டு வாழும்படியாயும் செய்யப்பட்டு விட்டதனாலேயே, எல்லாக் காலங்களிலும் எல்லா அரசாட்சிகளும் அப்படிப்பட்ட வஞ்சகர்களுக்கு உதவியாகவே இருக்க வேண்டுமா என்றும், யாரோ சிலருக்குப் பிழைப்பதற்கு வேறு வழியில்லாததனாலேயே அந்த ஈனர்களுக்குக் கூலியாய் இருக்கும் இழிதகைமையை மற்றவர்களும் அடைய வேண்டுமா?

ஏதாவது ஒரு மனிதன், தன்னுடைய மதம் சிறுபான்மையானது என்றும், தன்னுடைய சாதி வலுவிழந்த சாதி என்றும், தன்னுடைய வகுப்பு தாழ்த்தப்பட்டதென்றும் சொல்லி அதன் காரணமாக ஆட்சியில் தனக்குள்ள பங்கு இன்னது என்பதைத் தெளிவாய்ச் சொல்லி, ‘என்னை நீ அடக்கியாள முடியாதபடி செய்து விடு’ என்று சொல்வதில் என்ன தப்பு? இதற்குப் பதில் சொல்லாமல் அப்படிக் கேட்பது, ‘குலாம் தன்மை’ என்றும், தேசத் துரோகத்தனம் என்றும் சொல்லுவதானால் அப்படிச் சொல்லுகின்றவர்களை எப்படிச் சொல்லுவது? ‘வயிற்றுப் பிழைப்புக்கு எச்சில் இலை பொறுக்கும் இழிதன்மை’ என்று ஏன் சொல்லக் கூடாது? தன் பங்கைத் தனக்குக் கொடு என்று கேட்டவுடன் கொடுக்க மறுத்த குடும்பங்கள் எல்லாம் நாசமுற்றே இருக்கின்றன. ஆகவே, எந்த மத, சாதி, வகுப்பாருடைய பங்கையானாலும் மறுத்து ஏமாற்றப் பார்த்தால் கண்டிப்பாக அந்த நாடு கேடுறுருவது திண்ணம்.

**(பெரியார், ‘குடிஅரசு’ 8.11.1931)**

## காதலர்களுக்கு இனிப்பு வழங்கிய கழகத்தினர் கைது

*காதலர் தினத்துக்கு இந்துத்துவா சக்திகள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் பெரியார் திராவிடர் கழகம் சாதி மறுப்பு திருமணங்கள் பெருக வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் அறிவார்ந்த காதலை வரவேற்று, பரப்புரை செய்து வருகிறது. திருச்சியில் காதலர் தினத்தன்று, காதலர்களுக்கு இனிப்பு வழங்கப்படும் என்று பெரியார் திராவிடர் கழகம் அறிவித்தது. திருச்சி மலைவாசல் அருகே செ.த.ராசேந்திரன் உள்ளிட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் அங்கே வந்திருந்த காதலர்களிடம் ரோசா மலர்களையும், இனிப்புகளையும் வழங்கி பாராட்டினர். காவல்துறையினர், இதனால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை உருவாகலாம் என்று கூறி கழகத்தினரை கைது செய்தனர். மாலையில் விடுவிக்கப்பட்டனர்.*

# காஞ்சி பயிற்சி முகாம் காட்சிகள்












PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஈரோட்டில் பெரியார் சமத்துவப் பேரணி




கடந்த ஜன. 2, 3, 4 - 2010 நாட்களில் தமிழ் மய்யத்தின் சார்பாக ஈரோட்டில், 'இது நம்ம ஈரோடு' - கலாச்சார விழா சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கலாச்சார விழாவையொட்டி, 'பெரியார் சமத்துவப் பேரணி'யும் நடந்தது. தமிழ் மய்யத்தின் பொறுப்பாளர்கள் கவிஞர் கனிமொழி, எம்.பி., அருட்தந்தை ஜெகத்கஸ்பர் இந்த நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இந்தப் பேரணியில 5000 கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். மாணவர்களுக்கு மூடநம்பிக்கைகளை விளக்கிடும் வகையில் மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும் என்று கருதிய விழாக் குழுவினர், பெரியார் திராவிடர் கழகத் தோழர்களிடம், பேரணியில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர். ஈரோடு கழகத் தோழர் இரத்தினசாமியிடம் அனுகி இதைக் கேட்டதைத் தொடர்ந்து, ஈரோடு மாவட்ட கழகச் செயலாளர் இராம. இளங்கோவன் உடுமலை திருமூர்த்தி, பயிற்சி முகாமில் இருந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரனிடம் கருத்துக் கேட்டனர். பெரியார் கருத்துகளைப் பரப்பிடும் வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தலைவர் பொதுச் செயலாளர்கள் கூறியதைத் தொடர்ந்து, பேரணியில் தோழர்கள் பங்கேற்கத் தயாரானார்கள்.

இடைபட்ட ஒரே நாளில் இரத்தினசாமி, இராம. இளங்கோவன், நாத்திகசோதி, குமரகுருபரன், புதுரோடு இராசேந்திரன், சுப்ரமணியம் மற்றும் தோழர்கள் அனைவரும் இணைந்து கடுமையாக உழைத்து, ஒரு மாபெரும் கருஞ்சட்டை பேரணியை நடத்தினர். கழக செயற்குழு உறுப்பினர் கோவை ஆறுச்சாமி தலைமையில் அலகுகுத்தி கார் இழுத்தல், அலகு குத்தி அந்தரத்தில் தொங்குதல், ஆணிப் படுக்கை, சுருள் கத்தி வீசுதல் போன்ற நிகழ்ச்சிகளை தோழர்கள் நடத்திக் காட்டினர். ஆறுச்சாமி மிகவும் நேர்த்தியாக, சிறப்பாக இந்த நிகழ்வுகளை உடனிருந்து நடத்திக் காட்டினார். அத்துடன் தீச்சட்டி எடுத்தல் போன்ற அனைத்து மூடநம்பிக்கைகளை விளக்கும் நிகழ்ச்சிகள் பேரணியில் இடம் பெற்றன.

பெரியார் சமத்துவப் பேரணியில் தோழர்களின் ஊர்வலத்தை கனிமொழி, எம்.பி. மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் இறுதிவரை தனி மேடையில் இருந்து பார்த்து ரசித்தார்கள்.

பெரியார் பிறந்த மண்ணில், பெரியார் திராவிடர் கழகத்தின் மகத்தான வளர்ச்சியை, கொள்கைப் பரப்பும் திறனை கனிமொழி, எம்.பி. மற்றும் அருட்தந்தை ஜெகத்கஸ்பர் ஆகியோர் மனம் திறந்து பாராட்டினர். வெ. ஆறுச்சாமி, இராம. இளங்கோவன், இரத்தினசாமி, நாத்திகசோதி ஆகிய நால்வருக்கும் விழாக் குழு சார்பில் கனிமொழி சால்வை அணிவித்து பாராட்டினார்.

## சுவரெழுத்து சுப்பையா சிந்தனைப் பொறிகள் - முன் வெளியீட்டுத் திட்டம்



சுவரெழுத்து புரட்சியாளர், சுவரெழுத்து சுப்பையா சிந்தனைப் பொறிகளை கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் வெளியிடும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. தமிழ்நாட்டு சுவர்களில் சுவரெழுத்து சுப்பையா எழுதிய வாசகங்களை அவரது கையெழுத்துப் படியிலேயே அச்சேற்றப்பட்டு, நூலாக வெளிவருகிறது. 500 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் விலை ரூ.350. முன் பதிவுத் திட்டத்தின் கீழ் ரூ.250 விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் முதல் வாரத்தில் வெளி வரும் நூலுக்கு மார்ச் 15 ஆம் தேதி வரை முன்பதிவுக் கட்டணம் செலுத்தலாம்.

தொடர்புக்கு: வெ.ஆறுச்சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர். பேசி: 94420 11044 வங்கி எண்: 480886827, இந்தியன் வங்கி, ராம் நகர், கோவை.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு வகுப்பிலும் வகுப்பு முடிந்த பிறகு, தோழர்கள் எழுப்பிய வினாக்களுக்கு பயிற்சி அளித்தவர்கள் விளக்கமளித்தார்கள். பிறகு பயிற்சியளித்தவர்கள் வகுப்பில் முன் வைத்த கருத்துகளிலிருந்து 5 கேள்விகளை தோழர்களிடம் கேட்க, சரியான விடையளித்தவர்களுக்கு, நூல்கள் பரிசாக வழங்கப்பட்டன. தோழர் சிற்பி இராசன் அனைத்து நூல்களையும் அன்பளிப்பாக வழங்கினார். மயிலாடுதுறையிலிருந்து மூன்று தோழர்களும், பெங்களூரிலிருந்து மூன்று தோழர்களும் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சி பெறும் தோழர்களுக்கு பெயர் பொறித்த அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்களின் இயக்க கொள்கை தொடர்பான விவரங்கள், விண்ணப்பங்கள் வழியாக திரட்டப்பட்டன. அனைவருக்கும் வரலாற்றில் புராணங்களில் பார்ப்பனர்கள் நடத்திய படுகொலைகள்; பார்ப்பனியம் - பார்ப்பனர் பூணூல் தத்துவம் தொடர்பான தகவல்கள், குறிப்புகளாக தொகுக்கப்பட்டு கையேடாக வழங்கப்பட்டது.

காஞ்சி மக்கள் மன்றத்தின் தோழியர்களும், பயிற்சியில் பங்கேற்று, அய்ய வினாக்களை எழுப்பி விளக்கங்களைப் பெற்றனர். பயிற்சி பெறும் தோழர்கள், பயிற்சி தந்தவர்கள் அனைவரும் காஞ்சி மக்கள் மன்றத்திலே தங்கினர். காஞ்சி மக்கள் மன்றத்தின் தோழியர்கள் - உணவு, தங்குமிட ஏற்பாடுகளை சிறப்பாக செய்தனர். நேர விரயமின்றி திட்டமிட்டபடி, இரு நாட்களிலும் 9 வகுப்புகள் நடந்தன. பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி முகாம் நிறைவடைந்தது.

**- நமது செய்தியாளர்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 9840940400

வரப்பெற்றோம் **"சட்டத்தை மதிப்பவர்களும் மறுப்பவர்களும்"**

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாய்ந்த வழக்கில், உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளை தமிழாக்கி, 'நியாய உரிமைகளுக்கான வழக்குரைஞர்கள் அமைப்பு' நூலாக வெளியிட்டுள்ளது. இரா. கலையரசு, கி. லெனின் ஆகியோர் தமிழாக்கம் செய்துள்ளனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்னுரையுடன் வெளி வந்திருக்கிறது இந்நூல். அடக்குமுறைச் சட்டங்களை அரசுகளும், காவல்துறையும் பழி வாங்குவதற்கும், பயமுறுத்துவதற்கும் முறைகேடாகப் பயன்படுத்துவதை, அம்பலமாக்குகிறது.

இந்நூலின் உள்ளடக்கம்: பக். 56; விலை : ரூ. 20. கிடைக்குமிடம்: நியாய உரிமைக்கான வழக்குரைஞர்கள் அமைப்பு, 7, ஐஸ்வர்யா வளாகம், கோபாலபுரம், கோவை - 18.

## சீர்காழி ரவிச்சந்திரனுக்கு முதலாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்

ஈழத் தமிழர்களின் உயிர்காக்க தன் உடலுக்கு தீயிட்டு உயிரிழந்த காங்கிரசு கட்சியைச் சார்ந்த சீர்காழி ரவிச்சந்திரன் முதலாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம், சீர்காழி புதிய பேருந்து நிலையம் அருகில் 7.2.2010 அன்று நடைபெற்றது. நகர துணை செயலாளர் கா.சு.அனந்தராசு தலைமையில் முகேசு வரவேற்க, நகரத் தலைவர் ப.வ. பெரியார் செல்வம் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் நகர கழகத் தோழர்கள் சுந்தரபாண்டி, இன்பசேகரன், நரேசு, சரவணன், பாக்கியராசு, அன்பு, கிருஷ்ணகுமார் மற்றும் ஏராளமான இன உணர்வாளர்களும் கலந்து கொண்டனர். இறுதியாக சீர்காழி நகர செயலாளர் பிநா. சந்தோசு நன்றி கூறினார்.


## முகாம் வெற்றிக்கு உழைத்த தோழர்கள்

சென்னை மாவட்டக் கழக பயிற்சி முகாம் வெற்றிக்கு தோழர்கள் உமாபதி, அன்பு தனசேகர், தபசி.குமரன், சுகுமார், செல்வகுமார், இளைய சிம்மன், தனஞ்செழியன், தமிழ்ச் செல்வன், குணா, குமரேசன் ஆகியோர் முன்னின்று செயல் பட்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 5th March 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2041 | மார்ச் 11, 2010 | புரட்சி 9 | முழக்கம் 9 | விலை: ரூ.2.50


### ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ மீது புகார்; நீதிபதிகள் ஏற்க மறுத்தனர்

## ‘குடிஅரசு’ வழக்கு: தீர்ப்பு தள்ளி வைப்பு

*பெரியாரின் ‘குடிஅரசு’ இதழ்களிலிருந்து பெரியார் எழுத்துப் பேச்சுகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிட தடை கோரி, கி.வீரமணி தொடர்ந்த வழக்கு, விசாரணை முடிவடைந்தது. தீர்ப்பை நீதிபதிகள் ஒத்தி வைத்துள்ளனர். விரைவில் தீர்ப்பு வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

கடந்த மார்ச் 8 ஆம் தேதி இறுதியான விசாரணை. நீதிபதிகள் எப்.எம். இப்ராகிம் கலிபுல்லா, எஸ். கிருபாகரன் முன்னிலையில் வந்தது. இந்த வழக்கில், தன்னையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று தஞ்சை இரத்தினகிரி தாக்கல் செய்த மனுவை, ஏற்கனவே உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில், இரத்தினகிரி சார்பில், மேல் அமர்வு மன்றத்திலும், முன்னாள் அரசு வழக்கறிஞர் வேங்கடபதி மனுதாக்கல் செய்து வாதிட்டார். வேங்கடபதி முன் வைத்த வாதங்களுக்கு, கழக சார்பில் நேர் நின்ற மூத்த வழக்கறிஞர் ஆர். தியாக ராசன் பதிலளித்து மனுவை தள்ளுபடி செய்யக் கோரினார். இரு தரப்பு வாதங்களையும் நீதிபதிகள் கேட்டனர்.

இந்த நிலையில், திராவிடர் கழக வழக்கறிஞர் வீரசேகரன் பேச எழுந்தபோது, நீதிபதிகள், ஏற்கனவே விவாதங்கள் முடிந்து விட்டதால் மீண்டும் பேச அனுமதிக்கவில்லை.

உயர்நீதிமன்றத்தில் நடந்த வாதங்களைத் தொகுத்து, ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வெளியிட்ட இதழ்களை நகல் எடுத்து, நீதிபதிகளிடம் காட்டி வழக்கறிஞர் வீரசேகரன் புகார் செய்தார். இந்த வழக்குப் பற்றி ஊடகங்கள் பரப்பும் செய்திகளை, நீதிபதிகள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புவதாகக் கூறினார். நீதிபதிகள், அதையெல்லாம் கேட்கத் தயாராக இல்லை என்று கூறிவிட்டனர்.

“ஊடகங்கள் வெளியிடும் செய்திகள் பற்றி எல்லாம் நாங்கள் கவனம் செலுத்திக் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை. இந்த நீதிமன்றத்தின் முன் உள்ள வழக்கு, அது தொடர்பான ஆவணங்களை மட்டுமே நாங்கள் பரிசீலிப்போம்” என்று நீதிபதிகள், தி.க. வழக்கறிஞர் வீரசேகரின் கோரிக்கையை நிராகரித்தனர்.

தீர்ப்பு நிறுத்தி வைக்கப்படுவதாக நீதிபதி கலிஃபுல்லா அறிவித்தார், வழக்கறிஞர்கள் எஸ்.துரைசாமி, ஆர். தியாகராசன், இளங்கோ, கிளேடியல் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் குமாரதேவன், வழக்கறிஞர் அமர்நாத், கழகத் தோழர்கள் தபசி குமரன், உமாபதி, மயிலை சுகுமாறன், குணா, கோபி, செல்வம் ஆகியோர் நீதிமன்றம் வந்திருந்தனர்.

## ‘பெண்ணுரிமையை வாழ்வியலாக்குவோம்’

உலக மகளிர் நாள் பொதுக்கூட்டம் வடசென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் மார்ச் 8 ஆம் தேதி அயனாவரத்தில் கழகத்தோழர் நாபாஸ்கர் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. பெரியார் வலியுறுத்திய பெண்ணுரிமைக் கருத்துகளை குடும்பத்தில் பின்பற்றி, வாழ்வியலாக்குவோம் என்று தோழர்கள் உறுதி ஏற்றனர்.

கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் அஜிதா சிறப்புரையாற்றினர்.

பெரியாரியத்தை கொள்கையாக ஏற்றுக் கொண்டவர்களின் குடும்பங்களில் குழந்தைகளை பெண், ஆண் வேறுபாடின்றி வளர்க்க வேண்டும்; பெயர் சூட்டும்போதும் அடையாளத்திலும் ‘பெண்மை’ எனும் பெயரால் அடையாளங் களைத் திணிக்கக் கூடாது. குறிப்பாக சமையல் அறைப் பணிகள், பெண், ஆண் இருவருக்கும் பொதுவாக்கப்பட வேண்டும்.

குழந்தை வளர்ப்பிலேயே பெண், ஆண்களின் பாகுபாடுகளைத் திணிக்கப்படும் நிலையிலிருந்து விலகி நிற்க வேண்டும் என்ற கருத்துகள் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டன. பெண்களுக்கான உரிமையை அங்கீகரித்து, அதை குடும்பத்தில் வாழ்க்கை நெறியாக்கும் கடமை, ஆதிக்கவாதிகளாக விளங்கும் ஆண் வர்க்கத்திடமே இருப்பதால், மகளிர் உரிமைக்கான கருத்துகள், பெண்களைவிட ஆண்களிடமே, பரப்பிட வேண்டிய அவசியம் இருப்பதை கூட்டத்தில், பேசியவர்கள் சுட்டிக்காட்டினர்.

மகளிர் நாள் கூட்டம் நடக்கும் நாளில் மட்டும், மகளிர் திரட்டப்பட்டு அரங்குகளில் அமர்த்தப்படுவார்கள். சடங்காக நிகழ்ச்சிகள் நடைபெறும். இந்த வழக்கமான நிலைக்கு மாறாக ஆண்களைத் திரட்டி, அவர்களிடம் ஆண்கள் ஆதிக்கத்தைக் கைவிடவேண்டும் என்ற கருத்தை சென்னையில் நடந்த கழகக் கூட்டம் வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். உள்ஒதுக்கீடு என்ற கோரிக்கையை முன் வைத்து, 33 சதவீத இடஒதுக்கீடு சட்டத் திருத்தத்தை முடக்கிவிடக் கூடாது என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் கழகத் தோழர்கள் அன்பு தனசேகர், தமிழ்ச்செல்வன், ச. குமரன், சொ. அன்பு, சி. மணி வண்ணன் ஆகியோர் உரையாற்றினர். தோழர்கள் நாத்திகன், கீர்த்தி, பாடல்களைப் பாடினர். சென்னையில் உலக மகளிர் நாளை பொதுக் கூட்டமாக நடத்திய ஒரே அமைப்பான பெரியார் திராவிடர் கழகத்தின் இந்த முயற்சியைப் பலரும் பாராட்டினர்.

### கழக ஏட்டுக்கு சந்தா: தோழர்களின் பாராட்டத்தக்க முயற்சிகள்

காஞ்சியில் சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் நடத்திய பயிற்சி முகாமில், கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு 160 சந்தாக்களுக்கான பட்டியலையும், அதற்கான ஆண்டு கட்டணத்தையும் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணியிடம் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் உமாபதி, தலைவர் தபசி குமரன் ஆகியோர் அளித்தனர்.

திருப்பூர் கழகத்தின் சார்பாக கழக ஏட்டுக்கு 45 சந்தாக் களுக்கான முகவரி பட்டியலையும், அதற்கான ஆண்டு கட்டணத்தையும் மாவட்டக் கழகத் தலைவர் சு. துரைசாமி, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் மார்ச் 7 ஆம் தேதி இருகூரில் நடந்த கழகக் கூட்டத்தில் வழங்கினார்.

மதுரை மாவட்ட கழகத்தின் சார்பாக 50 புதிய சந்தாக்களையும், அதற்கான ஆண்டு கட்டணத்தையும் மதுரை மாவட்ட கழகத் தோழர்கள், தமிழ்ப் பித்தன், முருகேசன், பெரிய சாமி ஆகியோர் மார்ச் 7 ஆம் தேதி திருப்பூரில் நடந்த கழகத் தோழர் முகிலன் மண விழாவில், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் அளித்தனர்.

### கோபியில் சாமியார் படங்களுக்கு செருப்படி




ஈரோடு மாவட்டம் கோபியில் 4.3.2010 வியாழன் மாலை 4 மணியளவில் பேருந்து நிலையம் முன்பு சாமியார்கள் சொத்துகளை பறிமுதல் செய்து அரசுடமையாக்கக் கோரியும், சாமியார்களின் அனைத்து மடங்களையும் சோதனை நடத்தி சொத்துகளையும் பறிமுதல் செய்யக் கோரியும், கோபி நகர அமைப்பாளர் குணசேகரன் தலைமையில், மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சாமியார் நித்யானந்தன், கல்கி ஆகியோர் படங்களை தோழர்கள் செருப்பால் அடித்து, தங்களின் எதிர்ப்பைக் காட்டினர். சுமார் அரை மணி நேரம் தோழர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

தலையங்கம்

# கடவுள் இல்லை

சாமியார்கள் என்றால், அதில், அசல், போலி என்று வேறுபாடுகள் கிடையாது. சமுகத்தை எல்லோருமே சுரண்டுகிறவர்கள்தான். அண்மையில் நித்தியானந்தா என்ற சாமியார், தமிழ்த் திரைப்பட நடிகை ஒருவருடன் இருந்த படுக்கையறை காட்சிகளை, ‘சன்’ தொலைக்காட்சி ஒளிபரப்பியதைத் தொடர்ந்து, தமிழகமே பரபரப்பானது. அவர் மீது மோசடி, பாலியல் வன்முறை, கொலை மிரட்டல் சட்டப் பிரிவுகளில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சேலம் ஆத்தூரைச் சார்ந்த லெனின் கருப்பன் என்ற நித்தியானந்தரின் முன்னாள் சீடர், காவல்துறையில் தந்த புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நித்தியானந்தரின் படுக்கை அறை பதிவுகளை வெளியிட்டதற்கு லெனின் கருப்பன் என்பவரே பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ளார். காஞ்சிபுரம் கோயிலின் கருவறைக்குள் தேவநாதன் என்ற பார்ப்பன அர்ச்சகர் பெண்களுடன் பாலுறவு கொண்ட காட்சிகள் இதேபோல் படமாக்கப்பட்டு, பத்திரிகைகளில் வெளிவந்தன. கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள காஞ்சி பார்ப்பன சங்கராச்சாரி ஜெயேந்திரன் மீதும் பாலியல் தொடர்பான புகார்கள் வந்தன. அனுராதா ரமணன் என்ற பார்ப்பன எழுத்தாளரே, காஞ்சி சங்கராச்சாரி, தன்னிடம் தவறாக நடக்க முயன்றதாக குற்றம் சாட்டினார்.

‘கல்கி’ அவதாரமாக தன்னை கூறிக் கொள்ளும் ஆன்மீக சாமியார் நிறுவனங்களில் ஏற்கனவே வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி, வரி ஏய்ப்புகளைக் கண்டறிந்தனர். அவர் பெருமளவில் நில மோசடி செய்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இல்லறத்துக்கு எதிராக துறவறத்தையும், ஆன்மீகத்தையும் பரப்புவதாகக் கூறும் இவர்களின் சொந்த வாழ்க்கை, இதற்கு நேர் மாறாக இருப்பதை அறிந்து உண்மையான பக்தர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஆன்மீக சாமியார்களின் வலிமையே அவர்கள் தங்களுக்கான சீடர்களைத் திரட்டுவதில்தான் அடங்கியிருக்கிறது. தங்களது பேச்சுத் திறமையாலும், உளவியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தங்களிடம் இருப்பதாக பொய்யான நம்பிக்கையை உருவாக்குவதிலும் மிகுந்த திறமையுடன் செயல்படுவதாலும், சீடர்களைத் திரட்டி, அவர்களை அரண்களாக்கிக் கொண்டு, தங்கள் வணிகத்தை நடத்தி வருகிறார்கள்.

மதம் என்ற கோட்பாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு உருவானதாகும். அப்போது அதற்காக வகுக்கப்பட்ட விதிகளும், மனிதன், உலகம், சமுகம் பற்றிய அதன் கருத்துகளும், அறிவியலுக்கு முரண்பட்டவையாகும். அச்சத்தாலும், கற்பனையாலும் மதங்கள் உருவான பிறகு, சமுக வரலாற்று உருவாக்கத்தில் குடும்பம் என்ற அமைப்புகள் தோன்றின. குடும்ப அமைப்புகளுக்கும், அதன் உறுப்பினர்களுக்கும் கருத்தியலை மதங்களே வழங்கின. மதங்களின் சட்டங்களே மக்களுக்கான சட்டங்களாகவும் இருந்தன.

பின்னர், அரசு உருவாகி, ஜனநாயகம், நாடாளுமன்றங்கள், நீதி மன்றங்கள், அதற்கான தனி சட்டங்கள், விதிகள் உருவாகி, மதங்களிலிருந்து துண்டித்துக் கொண்டன. அரசு, மக்களுக்கான பாதுகாப்பை ஏற்றுக் கொண்டு, கடவுள்களே, மக்களைக் காப்பாற்றி விடுவார் என்ற பழமைவாத சிந்தனைக்கு விடை கொடுத்தது; தங்களுடைய பிரச்சினைகளுக்கான முழுமையான தீர்வுகளையும், கோரிக்கைகளையும், மக்கள் அரசுகளிடமும், கடவுள்களிடமும் முன் வைத்தாலும்கூட, காலப் போக்கில், கடவுள்களைவிட, ஆட்சிகளும், அரசுகளுமே மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டனர். ஆட்சியமைப்பிலிருந்து தங்களை முற்றாக விடுவித்துக் கொண்டு, “ஆண்டவன் சாம்ராஜ்யத்துக்குள்” மட்டும் ‘அடைக்கலமாகி’விட்ட எந்த மதவாதியும் கிடையாது. சங்கராச்சாரிகளுக்கும், பாதிரியார்களுக்கும், முல்லாக்களுக்கும்கூட அரசு பாதுகாப்புதான் தேவைப்படுகிறது. கடவுள் தண்டிப்பார் என்று நீதிமன்றங்கள் தண்டிக்காமல் இருந்துவிடாது. நரகத்தில் தண்டனை கிடைத்துவிடும் என்று நம்பி சிறைச்சாலைகள் இழுத்து மூடப்பட்டுவிடவில்லை.

கீதையை மட்டுமே நம்புவேன்; குர்ரானை மட்டுமே ஏற்பேன்; பைபிளுக்கு மட்டுமே கட்டுப்படுவேன் என்று எவரும் கூறி சட்டத்திலிருந்து தப்பித்துவிடவும் முடியாது. மதங்களைப் பற்றிய குறைகளை சுட்டிக்காட்டுவதாலேயே, மத உணர்வைப் புண்படுத்துவதாக கூப்பாடு போடுகிறவர்கள், கடவுள், மதங்களின் உரிமைகளை அரசுகளும், சட்டங்களும், செல்லாக்காசுகளாக்கி விட்டதைப் பற்றி வாய் திறப்பதே கிடையாது. அந்த அரசுகளை ஏற்றுத்தான் வாழ்கிறார்கள்.

சமுகத்தின் போக்குகளில் உருவாகி வரும் மாற்றங்கள் வாழ்க்கையில் பண்பாட்டில் எதிரொலிக்கத்தான் செய்யும் இந்த மாற்றங்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய கருத்தியல்கள் – கடவுள், கோட்பாடுகளிலோ, மதங்களுக்கான விதிகளிலோ இல்லை என்பதை எவருமே மறுத்துவிட முடியாது. வழிபாட்டுத் தலங்களை மட்டுமே நாடிச் சென்றவர்கள், தங்களின் வாழ்க்கை நெருக்கடிகளுக்கான தீர்வுகள் – அவற்றில் கிடைக்காத நிலையில் அதே நம்பிக்கையைப் பயன்படுத்தி, ‘ஆன்மீக’த்தைக் கடை பரப்பிய சாமியார்களை நோக்கிச் சென்றனர். இரண்டுக்குமே அடிப்படை – கடவுள் மீதான நம்பிக்கை தான். சாமியார்களோ மூச்சுப் பயிற்சி, வாழ்வியல் கலை மற்றும் தன்னம்பிக்கை கருத்துகளை, பக்தி, ஆன்மீகத்தோடு குழைத்து பரப்பி, கடவுள் நம்பிக்கையை அழிய விடாமல் காப்பாற்ற முயன்றனர். சாமியார்கள் பன்னாட்டு நிறுவனங்களை முன்மாதிரியாகக் கொண்டு, தங்கள் ஆன்மீக வர்த்தகத்தைக் கட்டி எழுப்பி, மக்களைக் கடும் குழப்பத்தில் மூழ்கச் செய்து சுரண்டி வந்தனர்.

கடவுள் நம்பிக்கையிலிருந்து மீள முடியாதவர்கள் அல்லது அதற்கு முயற்சிக்க விரும்பாதவர்கள், மீண்டும் மீண்டும், தங்களின் நம்பிக்கைகளுக்கு, புதிய விளக்கங்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு – சாமியார்கள் வலையில் வீழ்ந்தனர்.

ஒருபுறம் மருத்துவம், உளவியல், அறிவியல் ஆய்வுகள், உண்மைகள் வளர்ந்து, மனித வாழ்வுக்கு புதிய கண்டுபிடிப்புகளை வழங்கிக் கொண்டே இருக்கிறது. மற்றொருபுறம், கடவுள், மத நம்பிக்கைகள் முற்றிலும் வீழ்ந்து விடாமல் தடுக்கும், புதிய முயற்சிகள். ஆன்மீகம், சாமியார்கள் என்ற போர்வையில் நடந்து வந்தன. இந்த முரண்பாடுகளுக்கு இடையே ஏற்படும் மோதல்கள் கூர்மையடையும்போது அம்பலப்பட்டு போகிறவர்கள் – சாமியார்களும், மதங்களும், கடவுள் கோட்பாடுகளும்தானே தவிர, விஞ்ஞானமோ, அறிவியல் கோட்பாடுகளோ அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சமுகத்தையும், அதன் உறுப்பினர்களான மக்களையும், சமத்துவமாகவும், தோழமையாகவும் நேசிக்கக் கூடிய ஒரு உயர்ந்த மனிதப் பண்பாட்டைக் கட்டி எழுப்புவதற்கு – மதங்களோ, கடவுள்களோ, துணைக்கு வரப்போவது இல்லை என்பதோடு, அவைகள் தடைக்கற்களாக நிற்கின்றன. காலாவதியாகி (Expiry) விட்டன! காலம் முடிந்து போன மருந்துகளை உட்கொள்வது ஆபத்துகளையும் பக்க விளைவுகளையுமே ஏற்படுத்தும். கோயில்களை மட்டுமே நாடிப் போனவர்கள் , பிறகு ஆன்மீகத் தோற்றத்தில் கடை பரப்பிய பாபாக்களையும், சாமியார்களையும் நாடி ஓடத் தொடங்கியதே – கடவுள், மதக் கோட்பாடுகள் செல்லாக்காசுகளாகிவிட்டதை வெளிச்சப்படுத்துகின்றன. இப்போது, ஆன்மீக சாமியார்களும் அம்பலமாகிவரும் நிலை வந்துவிட்டது.

இனியும், வாழ்க்கைக்கான தீர்வுகளையும், கருத்துத் தேடல்களையும், கடவுள், மதங்களுக்குள் தேடுவதில் எந்தப் பயனும் இல்லை என்ற உறுதியான முடிவுக்கு வரவேண்டும் என்பதையே, இப்போது அம்பலமாகி வரும் சாமியார்களின் மோசடிகள் கல்வெட்டைப்போல், உணர்த்தி நிற்கும் உண்மையாகும்.

1900 ஆம் ஆண்டு வெளிவந்த ரயில்வே அட்டவணையைப் பார்த்துக் கொண்டு, 2010 இல் ரயிலைப் பிடிக்க புறப்படுவதற்கும், கடவுள், மதம், சாமியார்கள் காட்டிய வழியில் போய் வாழ்க்கையை எட்டிப் பிடிக்க முயற்சிப்பதற்கும் எந்த வேறுபாடும் இல்லை. இரயிலையும், வாழ்க்கையையும் தவற விடவேண்டியதுதான்.

கடவுள் என்ற ஒன்றே இல்லை என்ற உறுதியான விஞ்ஞானத்தின் முடிவை ஏற்றுக் கொண்டால் மட்டுமே, முழுமையாக இந்த தூசி படிந்த பழமைவாதத்திலிருந்து மீள முடியும் என்பதை வலியுறுத்துகிறோம். மீண்டும் பெரியார் கூறுவதையே கூறுகிறோம்:

*“கடவுள் இல்லை; கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை;*
*கடவுளை கற்பித்தவன் முட்டாள்*
*கடவுளை பரப்புகிறவன் அயோக்கியன்*
*கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி.”*

## கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்று: தூத்துக்குடியில் கழகம் ஆர்ப்பாட்டம்

பெரியார் திராவிடர் கழகம், தமிழ்நாடு மாணவர் கழகம் இணைந்து தூத்துக்குடியில் 1 ஆம் நுழைவு வாயிலில் 27.2.2010 அன்று மாலை 6 மணியளவில் “தேசிய கல்வி ஆணையம் அமைப்பதை கண்டித்தும், கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றக் கோரியும்” கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் வ. அகரன் தலைமையில் மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு துவக்க உரையாற்றினார். கழக மாவட்ட துணை தலைவர் வே. பால்ராசு, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் இந்திரா, ஆதித் தமிழர் பேரவையின் ரா.வே. மனோகர், இந்திய பொதுவுடமை கட்சியின் ஆ. மோகன்ராசு, மாவட்ட கழக செயலாளர் கோ. அ. குமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழக தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் விளக்கவுரையாற்றினார். கிறித்தவர் வாழ்வுரிமை இயக்கத்தின் தோழர் நெய்தல் அன்டோ ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார். கழக மாவட்ட பொருளாளர் செ. செல்லத்துரை நன்றி கூறினார்.

## திருச்சியில் கழகத்தின் தொடர் நிகழ்ச்சிகள்

நித்தியானந்தசாமி படுக்கை அறையில் நடிகை ரஞ்சிதாவுடன் இருந்த செய்தி அம்பலத்திற்கு வந்துள்ளது. இதைக் கண்டித்து, நித்தியானந்த சாமியை கைது செய்யக் கோரியும், அவரது ஆசிரமங்களை இழுத்து மூடக் கோரியும், அவரது சொத்துக்களை பறிமுதல் செய்து, அரசுடைமையாக்கக் கோரியும், தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் 5.3.2010 அன்று காலை 10 மணிக்கு, திருச்சிராப்பள்ளி சிந்தாமணி அண்ணா சிலை அருகில் கழக மாவட்டத் தலைவர் செ.த. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திருவரங்கம் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து, மாவட்ட அமைப்பாளர் மீ.இ. ஆரோக்கிய சாமி, புதியவன், பழநிவேல், குமார் ஆகியோர் பேசினர். மாரியப்பன், ஆறுமுகம், மாரிமுத்து, பொன்னுசாமி, அசோக், அன்பழகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் மு. மனோகரன் நன்றி கூறினார்.

13.2.2010 அன்று மாலை 6 மணியளவில் திருச்சிராப்பள்ளி காட்டூரில் கழகம் சார்பில் தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு விளக்கப் பொதுக்கூட்டம், மாவட்ட அமைப்பாளர் மி.இ. ஆரோக்கியசாமி தலைமையில், மாவட்ட தலைவர் செ.த. இராசேந்திரன், டாக்டர் எஸ்.எஸ். முத்து, முத்துசெழியன் ஆகியோர் முன்னிலை வகிக்க, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். முன்னதாக சிற்பி ராசனின் ‘மந்திரமா தந்திரமா?’ கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் புலவர் முருகேசன் (ம.தி.மு.க.), தோழர் புதியவன் மற்றும் கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் மு.மனோகரன் நன்றி கூறினார்.

# கழுதைக்கு 'புரோகிதம்'

**காதலர் தினத்துக்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்து முன்னணியினர் கழுதைகளுக்கு திருமணம் செய்துள்ளார்கள். கழுதைகள் மணமக்களாக மாலையுடன் இருக்க, வேத புரோகிதப் பார்ப்பனர் மந்திரம் ஓதினால், கழுதைகள் அந்த புரோகிதனிடம் என்ன கேட்டிருக்கும்? ஒரு கற்பனை தான்.....**

*கழுதை :* ஏய், நீ யாரப்பா? ஏன் இப்படி எல்லாம், எங்களுக்கே எரிச்சல் ஏற்படும்படி கத்தறே; நெருப்பை மூட்டி புகையை போடுறே; எதுக்காக எங்கள இங்கே இழுத்து வந்திருக்கீங்க?

*புரோகிதன் :* இன்று காதலர் தினம்; அதை நாங்கள் எதிர்க்கிறோம். அதுக்காக உங்களை பிடிச்சு வச்சு கல்யாணம் செய்யறோம்.

*கழுதை :* அப்படியா? இப்படி எங்களைக் கட்டாயப்படுத்தி, இழுத்து வந்து, கல்யாணப் பந்தலிலே கட்டிப் போட்டு வச்சிருக்கீங்களே. இதேபோலத்தான் ஒவ்வொருவரும் கழுதையாகவே இருக்கணும்னு, மக்களுக்கு சொல்ல வர்றீங்களா?

*புரோகிதன் :*அடே, கழுதையே, நீ கூட, இப்படி எல்லாம் பேசுவீயோ? திமிராகப் பேசாதே!

*கழுதை :* திமிராகப் பேசுறது நீயா? நாங்களா? உன்னுடைய திமிர் எங்களுக்கு தெரியாதா?

*புரோகிதன் :* என்ன திமிர், சொல்லேன் பார்ப்போம்.

*கழுதை :*'சூத்திரனை' இழிசாதிக்காரன்னு அவன் வீட்டுக்குள்ளே நுழைஞ்சு, அவன் பணம், பருப்பு, அரிசி, எல்லாம் வாங்கிகிட்டு, அவனுக்கு புரியாத மொழியிலே பேசுறே! அதை காலம் காலமா கேட்டுகிட்டு, சொரணையற்று கிடக்கிறான், உங்க தமிழன். அந்தத் திமிரில் எங்களிடமும் பேசறே!

*புரோகிதன் :* அட திமிர்பிடித்த கழுதையே! உன்னிடம் பேசறதுக்கு நேரமில்லை. நான் மந்திரம் ஓதுவதைக் கேட்டுக்கோ. சீக்கிரம் சுபமுகூர்த்தத்தை முடிச்சுட்டு, அடுத்த தேவைக்கு கிளம்பனும். (புரோகிதன் மந்திரம் ஓதுகிறான்).

"ஸோமப்ரதமோ, விவிதே கந்தர்வோ விவித
உத்தர த்ருதியோ அக்நிஷ்டே பதி:
தூரியஸ்தே மநுஷய ஜா"

*கழுதை :*யோவ்! நிறுத்து; நிறுத்து. காது கிழியுது. இப்போ என்ன சொல்றே! இதுக்கு என்ன அர்த்தம்?

*புரோகிதன் :* ஏய் கழுதை, நானும் ஆயிரக் கணக்கில் முகூர்த்தங்கள் நடத்தி வச்சிருக்கேன். ஒரு பயல்கூட அர்த்தம் கேட்டதில்லை. உனக்கு அவ்வளவு துணிச்சல் வந்துடுச்சா?

*கழுதை :* நாங்க உங்க மக்களைப்போல, மானங் கெட்டவங்க இல்ல; மானமுள்ள கழுதைகள் நினைச்சுக்கோ. முதலில் அர்த்தத்தைச் சொல்லு.

*புரோகிதன் :* காசு கொடுக்கிறவன்கூட அர்த்தம் கேட்கிறதுல்ல. நீ எல்லாம் கேட்க வந்துட்டே! சொல்றேன் கேள். "பெண்ணே உன்னை சோமன் முதலில் அடைந்தான்; பிறகு கந்தர்வன் அடைந்தான்; மூன்றாவதாக அக்னி உன்னை ஏற்றுக் கொண்டான்; நான்காவதாக மனித ஜாதியில் பிறந்த இந்த கணவன் உன்னை அடைகிறான்" - இதுதான் நான் சொன்ன மந்திரத்தின் அர்த்தம்.

*கழுதை :* அடேய் புரோகிதா? அது யாருடா சோமன், கந்தர்வன், அக்னி? இப்படி கண்ட கண்ட 'தேவன்'களோட எல்லாம் எங்களை ஏன் தொடர்புபடுத்துகிறாய்? நாங்கள் கழுதைகள்; கழுதைகளோடுதான் சேர்வோம்; கழுதைகளோடு தான் உறவு வச்சுக்குவோம்; உங்க வேதத்துல சொல்றதுபோல கண்டவர்களோடும் அலைய மாட்டோம். இந்த மந்திரத்தை எல்லாம் எங்களிம் விடாதே. எங்களுக்குன்னு ஏதாவது மந்திரம் இருந்தா சொல்லு.

*புரோகிதன் :*அதெல்லாம், உங்களுக்கு எல்லாம் எங்களிடம் மந்திரம் ஏதும் இல்லை; வாயை மூடு.

*கழுதை :* பிறகு ஏண்டா, எங்களை இழுத்து வந்து கல்யாணம் பண்ணிப் பாக்குறீங்க. ஆமாம், சூத்திரர்கள் வேதத்தை ஓதக்கூடாதுன்னு நீ தானே எழுதி வச்சிருக்கே. பிறகு, ஏன், சூத்திரர் வீட்டுக்குப் போய் வேதம் ஓதி, பணம் வாங்குறே? பணம் கிடைச்சா, எதை வேண்டுமானாலும் செய்வீயோ!

*புரோகிதன் :* மானங்கெட்ட மனிதர்கள் அழைக்கிறார்கள், போகிறோம். வியாபாரம் நடக்குது, உனக்கென்ன வலிக்குது?

*கழுதை :* அதையெல்லாம் மானங்கெட்டவங்களோடு வச்சுக்க. நாங்கள் மானமுள்ள கழுதைகள்; தெரியுமா?

*புரோகிதன் :* மூட்டை தூக்குற கழுதே நீ, நாலுகால் பிராணி நீயா மானத்தைப் பற்றி பேசுறே! உனக்கு என்ன யோக்கியதை இருக்கு?

*கழுதை :* எனக்குத்தானப்பா, யோக்கியதை இருக்கு. எப்படின்னு கேக்குறீயா? சொல்றோம் கேள்.

நாங்கள் உங்கள் சட்டத்தின் குடிமக்கள் அல்ல; உங்களுடைய அடிமைச் சட்டம் எங்களைக் கட்டுப்படுத்தாது.

நாங்கள் இந்துக்கள் அல்ல; அதனால் எங்களிடம் பிராமணாள் கழுதை கிடையாது. 'சூத்திர'க் கழுதை கிடையாது. சாதிக் கழுதைகள் கிடையாது, பூணூல் போட்ட கழுதை கிடையாது நாமம், விபூதி போட்டால் உதைப்போம்!

எங்களுக்கு கோயில் கும்பாபிஷேகம் கிடையாது; நாள், நட்சத்திரம், ஜாதகம் கிடையாது. ஆவி, ஆத்மா கிடையாது. எங்களிடம் சங்கராச்சாரிகள் இல்லை. அதனால், வரதராஜப் பெருமாள்கள் சாக வேண்டியதும் இல்ல; அரசியல் கட்சிகள் கிடையாது; ஏமாத்தற தலைவர்கள் கிடையாது; ஓட்டு கேட்க ஓட மாட்டோம்; ஓட்டுக்கு பணம் தர வேண்டிய அவசிய மில்ல. ஆயிரம் ரூபா நோட்டாக இருந்தாலும், அதை எங்க வாயிலே போட்டு மென்று தின்னுடுவோம்; குட்டிச்சுவர் எல்லாம் எங்கள் தெருதான். நாங்க சுதந்திரமானவங்க... உழைச்சுப் பிழைக்கிறவங்க. மூட்டை தூக்குறவங்க. புரிஞ்சுதா? நாங்க இந்தியனும் இல்ல; இந்துவும் இல்ல. உன்னுடைய சட்டத்தை எங்ககிட்ட கொண்டு ஏங்கடா வர்றீங்க....!

*புரோகிதன் :*தேச விரோதியே! தேசத் துரோகியே! நீ மட்டும் மனுஷனாயிருந்தா, தேசப் பாதுகாப்புச் சட்டத்துல புடிச்சு உள்ளே தள்ளியிருப்போம், தெரியுமா? கழுதையா பிறந்துட்டே, தப்பிச்சுட்டே!

*கழுதை :* நல்லவேளையா கழுதையாகவே பிறந்தோம்; பிரம்மாவின் எந்த உறுப்பிலேயிருந்தும் பிறக்கலே; எங்க அம்மா வயித்துல பிறந்தோம்; தப்பிச்சோம். எங்களை கழுதையாகவே வாழ விடுங்கப்பா! எங்களை பிடித்து கட்டாயப்படுத்தி, ஏன், கல்யாணம் நடத்தி, வேதமந்திரங்களை ஓதி, எங்களை அவமானப்படுத்துறீங்க?

நாங்க பெண் கழுதைகளை ஆண் கழுதைகள் அடக்கியாள்கிறோமோ?

சாதிப் பேரைச் சொல்லி வன்முறை செய்யறோமா?

உங்கள் காதல் எதிர்ப்புக்கு நாங்கள் தான் கிடைச்சோமா?

டேய் புரோகிதா! நல்லா கேட்டுக்க; இன்னும் எத்தனை காலம், தான் இப்படி ஏமாற்றிப் பிழைப்பீங்க! போ! போய், உனது இந்து சட்டம், வேதம், புராணம் எல்லாவற்றையும் கொண்டுவந்து போடு; எங்களுக்கு தீராப் பசி! எல்லாவற்றையும் தின்று, மென்று விழுங்கி, மலமாக கழிக்கிறோம். அப்போதாவது புத்தி வருதா பார்க்கிறோம்!

கழுதை கட்டை உடைத்துக் கொண்டு, கத்திக் கொண்டே ஓடியது. பார்ப்பான் வேத மந்திரமும் அதோடு சேர்ந்து ஒலித்தது.

**– கோடங்குடி மாரிமுத்து**

# பழமொழிக்கவிதை

**– ஜெயபாஸ்கரன் –**

தாயே....
உன் முலைப்பாலில்
உயிர் பிழைக்கிறோம்
உனது சமையலில்
உடல் வளர்க்கிறோம்
பிறகு
தாரத்தின்
தட்சணையால்
தலை நிமிர்கிறோம்
வாய்க்குமெனில்
அவளது
மாதச் சம்பளத்தில்
ஏப்பம் விடுகிறோம்
இவ்வளவுக்கும் பிறகு
உன்னையே இப்படிச்
சொல்ல வைக்கிறோம்...
"பொட்டக் கோழி கூவி
பொழுது விடியாது!"

பெண்ணே.....
உன்
பேச்சுரிமையை மறித்து
அணை கட்டியிருக்கும்
நாங்கள்,
உன் பல் தெரியக்
கூடாதென்றும்
பழமொழியால் பலகை
போட்டிருக்கிறோம்...
"பொம்பள
சிரிச்சா போச்சு
புகையிலை
விரிச்சா போச்சு!"

சகோதரியே....
உழைப்பதைப் போலவே
உறங்குவதும் உன் உரிமை
உன்னுடைய
உரிமைகள் அனைத்தையும்
ஒவ்வொன்றாகப்
பறித்துவிட்ட நாங்கள்,
உறங்கும் உரிமையை மட்டும்
வேறு மாதிரியாக
வரையறை செய்திருக்கிறோம்
அதாவது,
"பின் தூங்கி
முன் எழுவாள் பத்தினி!"

மகளே...
உன் கல்வி
உரிமையின் மீது
எங்களது கைகள்
கல்லெறிந்து சோர்ந்த
வேளைகளில்
சும்மா இருக்க முடியாமல்
சொல்லெறிந்தும்
போர்த் தொடுப்போம்...
"அடுப்பூதும் பெண்ணுக்கு
படிப்பெதற்கு?"

ஆண்புத்தி
முன்புத்தி என்பதற்கு
ஆதாரம் எதுவும்
தென்படவேயில்லை
தேடிப்
பார்த்து விட்டோம்
இருந்தாலும் கூட
என்னருமைத் தோழியே
நீ ஒப்புக் கொண்டே
ஆக வேண்டும்...
"பெண் புத்தி
பின்புத்தி!"

**நன்றி: 'மல்லிகை மகள்'**

# முருங்கப்பட்டியில் கழகக் கூட்டம்

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை அருகிலுள்ள முருங்கப்பட்டி கிராமத்தில் 21.2.2010 அன்று தந்தை பெரியாரின் கொள்கைகளை பின்பற்ற வேண்டும். ஏன்? என்ற தலைப்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணித் தலைவர் கோகுல கண்ணன் தலைமையில் சிற்பி இராசன், சாமியார்களின் மோசடிகளை அம்பலப்படுத்தும் 'மந்திரமா? தந்திரமா?' நிகழ்ச்சியை நடத்தினார். புராணங்கள் பற்றியும் மூடநம்பிக்கைகள் பற்றியும் பேசியது இளைஞர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. தொடர்ந்து தமிழ்நாடு மனித உரிமை இயக்கத்தின் மாநில தலைவர் பூமொழி, பெரியாரின் மனித உரிமை போராட்டத்தை விளக்கிப் பேசினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். தோழர்கள் குப்புசாமி, ரமேசு, மணிமாறன், தளபதி கோவிந்தராசு, கணபதி, கேசவன் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்தனர். கழகத் தோழர் வசந்தி இல்லத்தில் தோழர்களுக்கு அசைவ உணவு வழங்கப்பட்டது.

## தியாகு தலைமையில் தமிழர் நெடும் பயணம் தொடருகிறது

தமிழர் மொழி, இன, அரசியல் உரிமைகளை முன் வைத்து தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் தோழர்கள், தோழர் தியாகு தலைமையில் நடைப்பயணம் ஒன்றை நடத்தி வருகிறார்கள். கடந்த ஜனவரி 25 ஆம் தேதி கோடியக்கரையில் இந்தப் பயணம் தொடங்கியது. 47 நாட்கள் தொடரும் இந்தப் பயணம், மார்ச் 12 ஆம் தேதி குடந்தையில் நிறைவடைகிறது. வழி நெடுக பயணக் குழுவினருக்கு தமிழின உணர்வாளர்கள் உற்சாகமாக வரவேற்று வருகிறார்கள்.

# கழகத்தின் பரப்புரைக் கூட்டங்கள்

21.2.2010 ஆம் நாள் காலை 10 மணியளவில், திருச்சிராப்பள்ளி, சிந்தாமணி சிகிலா விடுதியில், மாவட்டத் தலைவர் செ.த. இராசேந்திரன் தலைமையில் கம்பரசம் பேட்டை பெரியார் நகர் ச.இருளாண்டி, திருவரங்கத் தலைவர் டாக்டர் முத்து முன்னிலையில் நடைபெற்றது. ஆறுமுகம் வரவேற்புப் பேசினார். மாவட்ட செயலாளர் மனோகரன் நன்றி கூறினார். கலந்து கொண்டவர்கள்: திருவானக்கோவில் திருப்பூர் அரங்கராசன், முத்துச் செழியன், ஆரோக்கியசாமி, புதியவன், மாரிமுத்து, குமார், பழனிவேல் மற்றும் தோழர்கள்.

13.2.2010 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் காட்டூர் பகுதி திருச்சிராப் பள்ளியில் பல்வேறு பகுதியில் நடைபெற்ற தீண்டாமை, சாதி ஒழிப்பு, இரட்டைகுவளை ஒழிப்பு பிரச்சாரப் பயணம் நிறைவு விழா பொதுக் கூட்டம், பி.இ. ஆரோக்கியசாமி தலைமையில், செ.த. இராசேந்திரன் முன்னிலையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். மற்றும் டாக்டர் எஸ்.எஸ்.முத்து, முத்துச்செழியன், புதியவன், ம.தி.மு.க. புலவர் முருகேசன் உரையாற்றினர். தோழர் சிற்பி ராசனின் 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சி நடைபெற்றது. மு. மனோகரன் நன்றி கூறினார். கழகத் தோழர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### சீர்காழியில்

தமிழ் தேச விடுதலை இயக்கம் சார்பில் தமிழ் மீட்பு, தமிழர் மீட்பு நெடுநடை பயணம் வேதாரண்யத்தில் தொடங்கி, 15ஆம் நாள் 7.2.2010 அன்று மாலை 6.15 மணிக்கு சீர்காழி வந்தடைந்தது. பயணக் குழுவிற்கு கழகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பழைய பேருந்து நிலையம் அருகில் ம.தி.மு.க. கா. சுப்புவேலு, மாவட்டத் தலைவர் இரா.பரசுராமன் பயணத்தை வாழ்த்தி உரையாற்றினர். தமிழ்த் தேச விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தியாகு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் கழக பொறுப்பாளர்கள் நகரத் தலைவர் பெரியார் செல்வம், நகர துணைச் செயலாளர்கள் அனந்தராசு, சந்தோசு உட்பட கழகத் தோழர்கள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### சிந்தாமணியூர்





சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள சிந்தாமணியூர் கிராமத்தில் 22.2.2010 அன்று மாவட்ட தலைவர் மார்ட்டின் தலைமையில் கழக கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். சிற்பி இராசன் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சியை நடத்தினார். தோழர் ரவி இல்லத்தில் இரவு அசைவ உணவு வழங்கப்பட்டது. தோழர்கள் ஜெயபிரகாஷ், சின்னதுரை, ரவி ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

### நங்கவள்ளி

சேலம் மாவட்டம் நங்கவள்ளி பேருந்து நிலையம் அருகே பகுத்தறிவுப் பிரச்சாரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் நங்கவள்ளி அன்பு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம், மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழுவின் இசை நிகழ்ச்சியோடு துவங்கியது. சுமார் இரண்டு மணி நேரம் சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை நடத்தினார். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். தோழர்கள் இரவு மாட்டுக்கறி உணவு ஏற்பாடு செய்தனர். தோழர்கள் கிருஷ்ணன், ராசேந்திரன், அன்பு, செந்தில் ஆகியோர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 9840940400

# கொள்கை பரப்பு விழாவாக நடந்த கழகக் குடும்பத் திருமணம்




7.3.2010 அன்று பெரியார் திராவிடர் கழக திருப்பூர் ஒன்றிய செயலாளர் க. அகிலன் - சரண்யா வாழ்க்கை ஒப்பந்த விழா கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை யில் சிறப்புடன் நடந்தது. சனார்த் தனன், சந்திரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இலாவண்யா வரவேற்க, கழக பொதுச்செயலாளர்கள் கோவை கு. இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, கா.சு. நாகராசு, டிட்டோனி, முத்துச்சாமி, ஆசிரியர் செயபிரகாசம், வீ. சிவகாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருப்பூர் மாவட்ட, நகர நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். இறுதியாக இரமேசு நன்றி கூறினார்.

சமர்பா குழுவினர் எழுச்சி இசையும், சிற்பி. ராசனின் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சியும் நடைபெற்றது. பொள்ளாச்சி தாய்த் தமிழ்ப் பள்ளி குழந்தைகள், கல்லூரி மாணவர்கள் சுயமரியாதை திருமணத்தைக் காண வந்திருந்தது சிறப்பாகும். இது சாதி மறுப்பு மணவிழாவாகும்.

கோவை, சென்னை, மதுரை மாவட்ட கழகத் தோழர்கள் மண விழாவில் பங்கேற்றனர். கழகத்தின் கொள்கைப் பரப்பு விழாவாக மண விழா நடந்தது. திருமண நினைவாக கழக வளர்ச்சிக்கு ரூ.10,000 நன் கொடையை கழகத் தலைவரிடம் மணமகன் க. அகிலன் வழங்கினார். கழகத் தலைவர் அதை 'பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு வழங்கினார்.

# சுயமரியாதை வீரர் குருவிக்கரம்பை சு. வேலு முடிவெய்தினார்



சுயமரியாதை இயக்கப் போராளி குருவிக்கரம்பை சு.வேலு 3.3.2010 அன்று மறைந்தார். அவருக்கு வயது 80. பெரியாரின் இயக்கத் தளபதியாக இருந்த குத்தூசி குருசாமி யுடன் இளமைக் காலத்திலிருந்தே தொடர்பு கொண்டு, சுயமரியாதை இயக்கத்தின் பல்வேறு போராட்டங்களில் களம் கண்டவர் குருவிக்கரம்பை சு. வேலு. பெரியாரின் இயக்கத்திலிருந்து குத்தூசி குருசாமி பிரிந்து, 'சுயமரியாதை இயக்கம்' என்ற அமைப்பைத் தொடங்கியபோது, அவருடன் தொடர்ந்து இணைந்து பணியாற்றினார் வேலு. இவரின் மனைவி ராமாமிர்தம். தாலி அடிமைச் சின்னம் என்பதால் தனது தாலியைப் பெரியாரிடம் பகுத்தறிவு இயக்கத்துக்காக மனமுவந்து நன்கொடையாக வழங்கியவர். இவர்களின் மகள் மற்றும் இரு மகன்களுக்கும் சாதி மறுப்புத் திருமணம் செய்து வைத்தவர்.

குத்தூசி குருசாமியின் வரலாற்றை நூலாக எழுதி வெளியிட்ட பெருமை குருவிக்கரம்பை வேலு அவர்களுக்கு உண்டு. குத்தூசி வாழ்க்கை வரலாற்றைக் கூறும் ஒரே நூல் இது மட்டும்தான். சிந்து சமவெளி நாகரிகம், இவர்தான் புத்தர், ரிக்வேதம், வால்மீகி ராமாயணம் தமிழ் மொழி பெயர்ப்பு உள்ளிட்ட 22 நூல்களை அவர் எழுதியுள்ளார். அவரது விருப்பப்படி, அவரது உடல், போரூர் இராமச்சந்திரா மருத்துவனையிடம் ஒப்படைக்கப்பட்டது.

பல்வேறு தோழர்களின் உதவியுடன் குத்தூசி குருசாமிக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் வெண்கலச் சிலை வடிவமைக்கச் செய்தும், திறப்பு விழா நடத்த முடியவில்லை என்ற வருத்தத்துடன் மறைந்துள்ளார். கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் இறுதி மரியாதை செலுத்தினார்.

கழகம் நடத்திய குத்தூசி குருசாமி நூற்றாண்டு விழாக்களில் சென்னை, கோவை, திருப்பூரில் பங்கேற்று, அவர் பேசியதோடு, பெரியார் திராவிடர் கழகத்தின் பணிகளை பாராட்டி உற்சாகப்படுத்தி வந்தவர் ஆவார். அவரது மறைவு, பெரியாரியலுக்கு இழப்பு என்றாலும், வாழ்க்கையை அர்த்தமுள்ள பெரி யாரியல்வாதியாக வாழ்ந்து காட்டிய பெருமையோடு அவர் விடைபெற்றுள்ளார்.


### கழக ஏட்டுக்கு நன்கொடை

கழகத் தலைவர் வழியாக முகிலன் மணவிழாவில் ரூ.10,000/-
கரூர் கழகக் கூட்டத்தில் ரூ.2000/- - நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th March 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 மார்ச் 18, 2010 புரட்சி 9 முழக்கம் 10 விலை: ரூ.2.50


# உயர்கல்வி இடஒதுக்கீடு பறி போகிறது!

மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு சட்டம் கொண்டுவரப்பட்டவுடன் பார்ப்பனர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். புதுடில்லியில் உள்ள 'எய்ம்ஸ்' என்ற உயர் மருத்துவ பட்டப்படிப்பு ஆராய்ச்சி மய்யம், போராட்டத்தின் மய்யக் களமாக செயல்பட்டது. தேசிய தொலைக்காட்சி ஊடகங்களும், இந்தியாவின் பெரும் தொழிலதிபர்களும், பார்ப்பன தேசிய ஏடுகளும் கட்டுப்பாடாக, இடஒதுக்கீட்டுக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கி, ஆட்சியை மிரட்டினர். ஆட்சியாளர்களும் மிரட்டலுக்கு பணிந்தனர்.

27 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டால், அதே அளவு திறந்த போட்டிக்கான இடங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்தனர். அதுவும் 27 சதவீத பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டை, முதலில் 9 சதவீதம் மட்டும் 3 ஆண்டுகளில் ஒதுக்குவது என தீர்மானிக்கப்பட்டது. இடஒதுக்கீட்டால் "பாதிக்கப்படும்" மாணவர்களுக்கான கூடுதல் இடங்களை உருவாக்கி, அதற்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திய பிறகே இந்த 9 சதவீத இடஒதுக்கீட்டையும் அமுல்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றமும், நிபந்தனை விதித்தது. 2011-12 ஆம் கல்வி ஆண்டுக்குள் இந்த வசதிகளை செய்து முடிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால், அதற்கான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மத்திய நிதிநிலை அறிக்கையில் கல்விக்கான நிதி ஒதுக்கீடும் மிக மோசமாக குறைக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் 27 சதவீதத்தில் முதல் கட்டமாக அமுலாகவிருந்த 9 சதவீத இடஒதுக்கீட்டை மேலும் 3 ஆண்டுகள் தள்ளிப் போட மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் முடிவெடுத்து விட்டதாக அமைச்சக அதிகாரி வசந்த்குமார் மொஹந்தி என்பவர் அறிவித்துள்ளார். ஆக 6 ஆண்டுகளாக உயர்கல்வி நிறுவனங்கள், 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கான சட்டம் உருவான பிறகும் அமுல்படுத்தப்படாத நிலை தொடருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான வாய்ப்பு உரிமைகள் தட்டிப் பறிக்கப்பட்டுள்ளன. மிக முக்கிய இப்பிரச்னையில் அமைச்சகத்தின், ஒரு அதிகாரி மட்டத்திலேயே ஒரு அறிவிப்பை வெளியிட்டு, பிரச்சினையின் ஆழத்தை, முக்கியத்துவத்தை மலினப்படுத்திவிட்டது, மத்திய மனித வளமேம்பாட்டுத் துறை! சமூக நீதி பேசும் அரசியல் கட்சிகள் மவுனம் சாதிக்கின்றன. ஏற்கனவே நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் வழியாக இடஒதுக்கீடு உரிமைகள் முழுமையாகப் பறிக்கப்பட்டுவிட்டன.

சமூகநீதியின் தலைநகரம் தமிழ்நாடு என்று மேடைகளில் பேசும் கி.வீரமணிகள், இடஒதுக்கீடு இல்லாத நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களை நடத்துவதோடு, தமிழகத்தில் அங்கீகாரம் ரத்தான அத்தகைய பல்கலைக்கழகங்களுக்காக உச்சநீதிமன்றம் போய் வழக்காடுகிறார்கள். நியாயமாக, இத்தகைய பல்கலைக்கழகங்களுக்கு முதல் எதிர்ப்புக் குரலே வீரமணிகளிடமிருந்துதான் வந்திருக்க வேண்டும். பெரியார் இயக்கம், இடஒதுக்கீடு கொள்கைக்காக நிதி திரட்டிய காலம் ஒன்று இருந்தது. இப்போது இடஒதுக்கீடே இல்லாமல், நிகர்நிலைப் பல்கலைக்கழகம் நடத்துவதற்கு உச்சநீதி மன்றத்தில் வாதாட நிதி திரட்டுவதும், அதற்கும், சமூக நீதி ஆதரவாளர்கள் என்று கூறிக் கொண்டிருப்பவர்கள், 'கண்களை மூடிக் கொண்டு' நிதி வழங்கும் வெட்கக் கேடும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

தனியார் துறை இடஒதுக்கீட்டை, அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி கிடப்பில் போட்டு, பெரும் தொழில் நிறுவனங்களிடம் மண்டியிட்டு விட்டது.

மத்திய அரசுக்கு, கொள்கை வகுக்கும் உலக மயக் கொள்கையின் ஆதரவாளர்களான பார்ப்பன உயர்சாதி வர்க்கம், மாநிலங்களின் நிதி ஆதாரங்களைப் பறித்து, மத்தியில் குவிக்கத் தொடங்கி விட்டன. 'இந்து' நாளேட்டில் அமியாகுமார் பச்சி என்ற ஆய்வாளர் எழுதிய கட்டுரையில் (மார்ச் 10), இதைத் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

மாநில அரசுகள் அரசியல் சட்ட ரீதியாக மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கல்வி உரிமை, சுகாதார உரிமை, வாழ்வாதார உரிமைகளை நிறைவேற்றவிடாமல், மாநில அரசுகளுக்கான நிதி வருவாய்க்கான பாதைகளை, பார்ப்பன உயர்சாதி அதிகார வர்க்கம் அடைத்து, மத்திய அரசிடம் கொண்டு போய்விட்டதை அந்தக் கட்டுரை படம் பிடித்துக் காட்டியுள்ளது. நிதி ஆதாரங்களை முழுமையாக தன்வசமாக்கிக் கொண்ட மத்திய அரசு, அதை அமெரிக்கா மற்றும் அய்ரோப்பிய ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிதி நிறுவனங்களிடம் கையளித்துவிட்டது. அந்த நிதி நிறுவனங்களோ, இந்தியாவின் மாநில அரசுகளுக்கு நிபந்தனைகளுக்கு மேல் நிபந்தனைகளைத் திணித்து, நிதி ஒதுக்கீடு செய்கிறது. இதனால், மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன.

இப்படி, அதிகாரம் குவிக்கப்பட்டுள்ள துறைகளில் ஒன்றாக கல்வித் துறையும் மாறிவிட்டது. மத்திய அரசே, பெரும் நிதி மூலத்தனத்தோடு பல்கலைக்கழகங்களை மாநிலங்களில் தொடங்குகிறது. இந்தப் பல்கலைக்கழகங்களில் பின்தங்கிய பகுதிகளில் மட்டுமல்ல, மிகச் சிறப்பாக பல்கலைக் கழகங்கள் இயங்கும் மாநிலங்களிலும், மத்திய அரசு பல்கலைக் கழகங்களைத் தொடங்கி, ஏற்கனவே சிறப்பாக நடைபெற்று வரும் மாநில அரசு பல்கலைக்கழகங்களுக்கு நிதி ஒதுக்கீடு கிடைக்கச் செய்யாமல் முடக்கி விடுகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான தேசிய ஆணையம் ஒன்றை மத்திய மனித வளத்துறை அமைச்சகம் உருவாக்கி, கல்விக்கான அதிகாரம் முழுவதையுமே மத்திய அரசின் பிடிக்குள் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது.

இந்திய மக்கள் தொகையில் 5 முதல் 10 சதவீதம் உள்ள மேல்தட்டு உயர்சாதி பணக்கார பிரிவினருக்காகவே இந்தியாவின் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுவதாக அந்தக் கட்டுரை கூறுகிறது. வெகு மக்களை பாதிக்கும் மத்தியப் பார்ப்பன ஆட்சியின், இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புகள் எதுவுமின்றி, மீண்டும் காங்கிரசுடன் கூட்டணி சேரும் ஒரே நோக்கத்தோடு, தமிழக ஆளும் கட்சி செயல்பட்டு வருவது, மிகப் பெரும் அவலமாகும். ஒவ்வொரு நாளும் பாராட்டுகளையும் விழாக்களையும் அரங்கேற்றிக் கொண்டு, கடுமையான பிரச்னைகளிலிருந்து மக்களை திசை திருப்பிக் கொண்டிருக்கிறது தி.மு.க. ஆட்சி! ●

# அதிகாரமற்ற அலங்கார சட்டமன்றம்

தமிழகத்துக்கு புதிய 'சட்டமன்றம்' வடிவெடுத்துள்ளது. சுமார் 500 கோடி செலவில் எழில் குலுங்க, சென்னை நகரில் முதன்மையானப் பகுதியில் பளிச்சிடும் விளக்குகளோடு மக்களைக் கவர்ந்து நிற்கிறது இந்த அடுக்கு மாளிகை - "கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்த காலத்தில் அவரது ஆலோசனை கண்காணிப்பில் உருவானது" என்று வரலாறுகளில் தமது பெயரைப் பதிவு செய்ய, தமிழக முதல்வர் விரும்பினார்; அவர் விருப்பத்திற்கேற்ப கட்டிடமும் உருவாகி விட்டது.

சட்டமன்றம், அரசு நிறுவனங்களில் ஒரு உறுப்பு. இந்த சட்டமன்றத்துக்குள் நுழையலாமா? வேண்டாமா? என்று தி.மு.க.விலே விவாதங்கள் நடந்த காலம் உண்டு. 1952 தேர்தலில் போட்டியிடாத தி.மு.க., பிறகு கட்சிக்குள் வாக்கெடுப்பு நடத்தி, 1957 இல் தான் தேர்தல் களத்துக்கே போட்டியிட வந்தது. 1952 பொதுத் தேர்தலின்போது போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி, சுயேச்சை வேட்பாளர்கள், 'திராவிடத் தனியரசு' பிரச்சினையை ஆதரிப்பதாக, கையெழுத்திட்டு உறுதி தந்தால்தான், தி.மு.க. அவர்களை ஆதரிக்கும் என்று மதுரையில் கூடிய தி.மு.க. பொதுக் குழு முடிவு செய்தது. திராவிடத் தனியரசு லட்சியத்தோடு, சட்டமன்றம் நுழைந்த தி.மு.க., பிறகு சட்டமன்றத்தில் போட்டியிடத் தடை வரப் போகிறது என்பதற்காகவே, 'திராவிட நாடு கோரிக்கையை' கைவிட்டது. பெரியார் - தி.மு.க.வின் சட்டமன்ற நுழைவைக் கடுமையாக விமர்சித்தார். திராவிடநாடு லட்சியத்தை கைவிட்ட தி.மு.க., பிறகு, மாநில சுயாட்சி கோரிக்கையை முன் வைத்தது. மாநில சுயாட்சிக்காக தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், அந்த மாநில சுயாட்சி கோரிக்கைகள் எல்லாம் இப்போது காற்றில் பறந்துவிட்டன. முல்லைப் பெரியாறு அணையில் உச்சநீதி மன்றத் தீர்ப்பையே கேரள அரசு மீறினாலும், தமிழகத்தின் நியாயம் உணரப்படும் காலம் வரை காத்திருப்போம் என்று முதல்வர் சொல்கிறாரே தவிர, மாநில உரிமைக்கு போராடத் தயாராக இல்லை. கல்விப் பட்டியல், மாநில உரிமையிலிருந்து பறிக்கப்பட்டுவிட்டது. சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டம் இன்னும் அமுல்படுத்தப்படாது முடங்கிப் போய் நிற்கிறது. இதே சட்டமன்றத்தில் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றக் கோரி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், மத்திய அரசின் காதுகளுக்கு எட்டாமலே போனது. இனப்படுகொலை இந்திய ஆதரவுடன் நடந்து முடிந்துவிட்டது. அதன் 'சூத்ர'தாரியான சோனியா தான் சட்டமன்ற திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினர். இந்த சட்ட மன்றங்களில் நிறைவேற்றப்பட்ட பல மசோதாக்கள், மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றுத்தான் சட்டமாக முடியும்.

இப்படி, மாநிலங்கள் முழுமையாகத் தன்னாட்சி பெற முடியாத நிலையில், மாநில சட்டமன்றம் மட்டும், அலங்காரத்தோடு கம்பீரமாக, மின் விளக்குகளை உமிழ்ந்து கொண்டு 'பளிச்' காட்டி வருகிறது. லட்சியப் போராட்டங்களின் வெற்றிகளும், அதற்கான உண்மையான அர்ப்பணிப்புகளும்தான் வரலாறுகளில் பதிந்து நிற்குமே தவிர, கட்டிடங்களும், கல்வெட்டுகளும், பெயரைப் பரப்பலாமே தவிர லட்சியவாதிகளாக அடையாளப்படுத்தாது. வலிமையான அடித்தளத்தில் கட்டப்பட்டுள்ள சட்டமன்றம், வலிமையான முழுமையான தன்னாட்சி அதிகாரம் பெறும்போதுதான் அதன் அழகு முழுமை பெறும். சுதந்திரத் தமிழ்நாடு கோரிய பெரியார் பெயரில் இயக்கம் நடத்துவோர்கூட, சட்டமன்றக் கட்டிடப் புகழ் பாடத் தொடங்கி, சிறப்பு மலர் வெளியிடுகிற நிலைக்கு வந்து விட்டார்கள் என்பதுதான் வேடிக்கை. ●

**தலையங்கம்**

# மிரட்டலுக்கு, பணியக் கூடாது!

பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு மசோதா 14 ஆண்டுகால இழுபறிக்குப் பின் மாநிலங்களவையில் நிறைவேறியுள்ளது. மக்களவையில் நிறைவேறுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. மசோதாவை ஆதரித்த பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளிலேயே இது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. இந்த மசோதா சட்டமாகி விட்டால், 544 நாடாளுமன்ற உறுப்பினர்களில், 181 பேர் பெண்களாக இருப்பார்கள். 28 சட்டமன்றங்களில் உள்ள 4,109 சட்டமன்ற உறுப்பினர்களில் 1370 பேர் பெண்களாக இருப்பார்கள். இப்போது நாடாளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கை 10 சதவீதத்துக்கும் குறைவுதான். காங்கிரஸ் கட்சி, கடந்த தேர்தலில் வேட்பாளராக நிறுத்தியதே 43 பெண்கள்தான். அதேபோல், பா.ஜ.க. வேட்பாளராக நிறுத்தியது 44 பெண்களைத்தான்.

பெண்கள் இடஒதுக்கீடு மசோதா, பிற்படுத்தப்பட்டோர், முஸ்லீம்களுக்கான உள் ஒதுக்கீட்டோடு தான் வரவேண்டும் என்று கூறி, மசோதாவையே எதிர்க்கும் கட்சிகள் கடந்த தேர்தலில் களமிறக்கிய பெண்களின் எண்ணிக்கையும் குறைவுதான். பகுஜன் சமாஜ் கட்சி 28 பெண்களையும், சமாஜ்வாடி கட்சி 15 பெண்களையும் ஜனதா தளம் (யு) 3 பெண்களையும், ராஜ்டிரிய ஜனதா தளம் 2 பெண்களையும் மட்டுமே நிறுத்தியது. இந்த அரசியல் கட்சிகள் எல்லாமுமே பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் தர விரும்பவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இந்த நிலையில் சட்டம் இருந்தால் மட்டுமே பெண்களுக்கு அவர்களுக்குரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. எனவேதான் அப்படி ஒருசட்டம் வந்துவிடாமல் தடுக்கும் தீவிர முயற்சிகள் நடக்கின்றன.

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு ஒதுக்கீட்டுக்கான சட்டத்துக்கு எதிர்ப்பு இல்லாத போது, நாடாளுமன்றம், சட்டமன்றத்தில் பெண்களுக்கான உரிமைகளை வழங்கினால் மட்டும் கடும் எதிர்ப்புகள் வருகின்றன. பள்ளிகள், கல்லூரிகளில் இடஒதுக்கீட்டுக்கு எழாத எதிர்ப்பு, உயர்கல்வியில், மேல் பட்டப்படிப்பில் இடஒதுக்கீடு என்று வரும்போது, வலிமையாகி விடுவதைப் போல்தான்!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை உள்ஒதுக்கிடு ஏதும் இல்லை. தாழ்த்தப்பட்டோருக்கான ரிசர்வ் தொகுதி ஒதுக்கீடு மட்டுமே இருந்து வருகிறது. இந்த நிலையில் ரிசர்வ் தொகுதியில் நிறுத்தப்படும் வேட்பாளர் பெண்களாக இருந்தால், கட்டாயமாக அவர்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடிப் பிரிவினராகத்தான் இருந்தாக வேண்டும். ஏனைய தொகுதிகளில் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் பற்றிதான் இப்போது பிரச்சினை எழுகிறது. உயர்சாதி, நகர்ப்புற மேல்தட்டு வர்க்கப் பெண்கள் தேர்தல் களத்துக்கு வந்து, பெண்களுக்கான ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்ற வாதத்தை, மசோதாவை எதிர்க்கும் கட்சிகள் முன் வைக்கின்றன. இந்த வாதத்தில் உண்மை இருக்கிறதா என்பது மசோதா சட்டமான பிறகுதான் தீர்மானிக்க முடியும். ஆனால் மண்டல் அறிக்கை அமுலாகிய பிறகு, இந்திய அரசியலில் நிகழ்ந்த மாற்றத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பார்ப்பன உயர் சாதி அரசியல் பிரதிநிதித்துவமும், தலைமையும், அரசியலில் கடும் வீழ்ச்சியை சந்திக்க தொடங்கின. பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்டோரின் அரசியல் அத்தியாயம் தொடங்கியது.

இந்தியாவில் ஜனநாயகமும், சாதியும் இணைந்து கைகோர்த்து நிற்கும் நிலையில், ஒவ்வொரு தொகுதியிலும் நிறுத்தப்படுகிற வேட்பாளர்களை தொகுதியில் நிலவும் சாதிகளின் எண்ணிக்கையே தீர்மானிக்கிறது என்பதே கசப்பான உண்மை. இதனால், உள் இடஒதுக்கீடு ஏதும் இல்லாமலேயே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் கணிசமாக நாடாளு மன்றத்துக்கு வந்து விடுகிறார்கள். இந்த நிலையில் பெண்களுக்கான மசோதா உள்ஒதுக்கீட்டோடு மட்டுமே கொண்டு வரப்பட வேண்டும் என்று பிடிவாதம் காட்டுகிறவர்களின் நோக்கம், பெண்கள் பெருமளவு அரசியலுக்கு வந்துவிடக் கூடாது என்பது தானே தவிர, சமூகநீதிக்கான துடிப்பு அல்ல. உயர் கல்வித் துறையில் 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு பார்ப்பனர்களும், பார்ப்பன ஊடகங்களும் வீதிக்கு வந்து எதிர்ப்பு காட்டியபோது, இந்த 'சமூக நீதிப் போராளிகள்' வீதிக்கு வந்து போராடவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

'பெண்கள் மசோதாவை எதிர்க்கும் கட்சிகள் தேர்தலில் பெண் வேட்பாளர்களைத் தேர்வு செய்யும்போது, பிற்படுத்தப்பட்டோர், மைனாரிட்டிகளைத் தேர்வு செய்ய எந்தத் தடையுமே இல்லை' என்று, காங்கிரஸ் தலைவர் சோனியா ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார். அப்படிக் கூறாமல், 'காங்கிரஸ் கட்சி, பெண் வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் போது, பிற்படுத்தப்பட்டோர் மைனாரிட்டிகளுக்கே வாய்ப்பளிக்கும்' என்று சோனியா கூறியிருக்கக் கூடாதா? அப்படி கூறியிருந்தால், மசோதாவை எதிர்ப்போர் வாயை அடைத்திருக்கலாமே என்ற கேள்வியை 'இந்து' ஏட்டில் வெளிவந்த ஒரு கட்டுரை எழுப்பியிருக்கிறது. இது நியாயமான கேள்விதான். மசோதாவை ஆதரிக்கிற கட்சிகள், இப்படி ஒரு உறுதிமொழியை முன் வைத்தால், பெண்கள் மசோதாவுக்கான எதிர்ப்பு பெருமளவு அடங்கிப் போயிருக்கும்.

வி.பி.சிங் மண்டல் அறிக்கையை முதன்முதலாக அமுல்படுத்தியதே வேலை வாய்ப்பில் மட்டும்தான், அதிலும், விஞ்ஞானம், ராணுவம் தொடர்பான துறைக்கு பொருந்தாது என்றுதான் அறிவித்தார். ஆனாலும் கூட, முதலில் "கணக்கு தொடங்கப்பட்டும்" என்ற கண்ணோட்டத்தில், சமூக நீதியில் நம்பிக்கை உள்ள கட்சிகள் அதை வரவேற்றன. இதே அணுகுமுறையை பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவில் பின்பற்றுவதற்கு, ஏன் தயங்க வேண்டும்?

பெண்கள் அமைப்புகள் இதற்கான ஆதரவு இயக்கங்களைத் தொடங்கிட வேண்டிய நேரம் வந்துவிட்டது! மிரட்டலுக்கு ஆட்சி பணியக் கூடாது.

# திணறும் இந்து முன்னணிகள்

இந்துக்கள் உரிமைக்கு குரல் கொடுத்து வருவதாகக் கூறிக் கொள்ளும் இராம. கோபாலன் போன்றவர்களுக்கு இப்போது கடும் நெருக்கடி. நித்தியானந்தா போன்ற "ஆன்மிக"ங்களின் முகத்திரை கிழியத் தொடங்கியப் பிறகு உப்புக் கண்டம் பறி கொடுத்த பார்ப்பனர்கள்போல், விழி பிதுங்கி நிற்கிறார்கள். நித்தியானந்தா மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாத வரை அவர் நிரபராதிதான் என்று சட்டத்தின் பொந்துக்குள் போய் நுழைகிறார் இராம. கோபாலன். நித்தியானந்தாவும், 'சட்டப்படி நான் குற்றவாளியல்ல' என்கிறார். தங்களிடம், உயரிய சக்தி இருக்கிறது என்று கூறி, மக்களை ஏமாற்றியவர்கள் அரசுகளின் சட்டத்துக்குள் அடைக்கலம் தேடுகிறார்கள்.

கோயில், பக்தி போன்ற பிரச்சனைகளில் அரசு தலையிடக் கூடாது என்று அவ்வப்போது போராட்டங்கள் நடத்தி வரும் இராம.கோபாலன், நித்யானந்தா பிரச்சினையிலும் காஞ்சி சங்கராச்சாரி கொலை வழக்கிலும் அரசு தலையிடக் கூடாது என்று கூற முன் வருவாரா? அரசு சட்டங்களோடு மதம் முரண்பட்டு நின்றால், மண்டியிட வேண்டியது மதம்தான். அரசு சட்டங்களுக்கு கட்டுப்பட்டுத்தான், மதங்களும், மதத் தலைவர்களும் "ஜீவனத்தை" நடத்தியாக வேண்டும். மதப் பிரச்சினையில் அரசு தலையிடக் கூடாது என்று கூறும் இராமகோபாலன்தான், நித்யானந்தா மீதான குற்றம், இன்னும் சட்டத்தால் நிரூபிக்கப்படவில்லையே என்று சமாதானம் கூறக் கிளம்பியிருக்கிறார். பார்ப்பனர்களின் சாயம் வெளுக்கத் தொடங்கிவிட்டது.

### இராமகோபாலன் இரட்டை வேடம்

இதுவும் இராம. கோபாலன் கதை தான். இந்து சமுதாய ஒற்றுமையை குலைக்கக் கூடாது என்று கூறி வந்த இராம.கோபாலன், அந்த உபதேசத்தை இப்போது, சங்கராச்சாரிகளைப் பார்த்துக் கூறியிருக்கிறார். பிரச்சினை இதுதான் - காஞ்சிமடம், ஆதி சங்கரர் நிறுவிய மடம் அல்ல. ஆதி சங்கரர் நிறுவியதாக மோசடியாக சங்கராச்சாரி பார்ப்பனர்கள் கூறிக் கொண்டு, அதற்காக போலி வரலாறுகளை உருவாக்கிக் கொண்டு விட்டார்கள். பத்ரிநாத், பூரி, துவாரகா, சிருங்கேரி மடங்கள் மட்டுமே ஆதி சங்கரரால் நிறுவப்பட்டவையாகும். இந்த மடத்தின் சங்கராச்சாரிகள், காஞ்சி மடத்தை அங்கீகரிப்பது இல்லை. இந்தப் பிரச்சினை இப்போது அரித்துவாரவில் நடைபெறும் கும்பமேளாவிலும் எதிரொலித்திருக்கிறது.

கும்பமேளாவில் தங்களின் "பாவங்களைத்" தொலைக்க முழுக்குப் போட வரும் சங்கராச்சாரிகளுக்கு உத்தர்காண்ட் மாநில அரசு, அவர்கள் முகாம்களை அமைத்துக் கொள்ள நிலங்களை ஒதுக்கி வருகிறது. இதில், காஞ்சி மடம் உள்ளிட்ட போலி சங்கராச்சாரி மடங்களுக்கு, அரசு நிலம் ஒதுக்கீடு செய்யக் கூடாது என்று துவாரகா பீட சங்கராச்சாரியும், அவருடன் வந்துள்ள "சாதுக்களும்" எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். காஞ்சி சங்கராச்சாரி போன்ற போலிகளுக்கு, நிலம் ஒதுக்கப்படுவதை எதிர்த்து, தீக்குளிக்கப் போவதாகவும் மிரட்டியுள்ளனர். இதற்கு கும்பமேளா நிர்வாகத்தின் கூடுதல் அதிகாரி, வி.எஸ். தனிக் என்பவர் உத்தராகாண்ட் அரசு சார்பில் விடுத்துள்ள அறிக்கையில், ஆதி சங்கரர் நிறுவிய மடமாக காஞ்சி மடம் உள்ளிட்ட போலி மடங்களை அரசு அங்கீகரிக்கவில்லை என்றும், பத்ரிநாத், பூரி, துவாரகா மற்றும் சிருங்கேரி மடங்களை மட்டுமே அங்கீகரித்துள்ளது. அவர்களுக்கு மட்டுமே அரசு அனைத்து வசதிகளையும் செய்து தரும் என்றும் பதில் கூறியுள்ளார்.

காஞ்சி பார்ப்பன சங்கராச்சாரி இப்படி ஓரம் கட்டப்பட்டதைக் கண்டு குமுறிய இராம.கோபாலன் பொங்கி எழுந்து, அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்:

"நீ ஆதிசங்கரர் சர்வக்ஞர் பீடம் ஏற்று வந்த வழியில் வந்த ஸ்ரீ காஞ்சி பரமாச்சாரியாரின் பிரகாசத்தால் சங்கர மடங்களின் மீது பாரதம் மற்றும் உலகம் முழுதும் உள்ள மக்களிடையே பக்தியும் மரியாதையும் பரவியது என்பது வரலாற்று உண்மை" என்றும், "மக்களால் மதிக்கப்படும் மகான்களுக்கு மரியாதையும், வசதிகளும் செய்து கொடுக்கக் கூடாது என்று சொல்வது ஏற்கத் தக்கது அல்ல. சர்ச்சையைக் கிளப்பி, இந்து சமுதாய ஒற்றுமையைக் குலைத்து, மற்றவர்களின் ஏளனத்துக்கு ஆளாக வேண்டாம் என்று துறவியர் பெருமக்களை இந்து முன்னணி கேட்டுக் கொள்கிறது" என்றும், அறிக்கையில் கூறியுள்ளார். சங்கராச்சாரிகளிலேயே பெரும் 'பாவம்' செய்து, கொலைக் குற்ற வழக்கில், நீதிமன்றம் அலைந்து கொண்டிருக்கிற காஞ்சி சங்கராச்சாரி தான், "கும்ப மேளா"வில் "பாவத்தை"ப் போக்கிக் கொள்ள முன்னுரிமையும் முழு உரிமையும் படைத்தவர் என்ற கருத்தையும் இராம.கோபாலன், தனது அறிக்கையில் சேர்த்துச் சொல்லியிருந்தால், அவரது வாதம் மேலும் வலிமைப் பெற்றிருக்கும் என்பது நமது கருத்து. கொலைக் குற்றத்துக்குள்ளானவராக இருந்தாலும், பார்ப்பனராக இருந்தால் மக்களால் மதிக்கப்படும் மகான்கள்தான் என்று இராமகோபாலன்கள், அடித்துக் கூறி வருவதை தமிழர்கள் கவனிக்க வேண்டும்.

'மனுதர்மப்படி' கொலை செய்த பார்ப்பானுக்கு தலைமயிரை சிரைத்தாலே போதும்; அதுதான் தண்டனை. இந்திய தண்டனைச் சட்டமானாலும், மனுதர்மத்தின் முன் மண்டியிட வைப்போம் என்று சூளுரைத்து, பார்ப்பன அதிகார ஆளும் வர்க்கம், அரசுகளின் ஆதரவோடு, அரசு சாட்சிகளையே விலைக்கு வாங்கி, ஜெயேந்திர, விஜயேந்திர பார்ப்பனக் கும்பலை தப்பிக்கச் செய்யும் முயற்சிகளில் இறங்கிவிட்டனர். தி.மு.க. ஆட்சியில்தான். பார்ப்பனர் தப்பிக்க வழி திறந்துவிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, 'திராவிட'ராக, பார்ப்பன நடிகர் எஸ்.வி. சேகரை அங்கீகரித்து தி.மு.க. பொதுக் குழுவிலும் சிறப்பு விருந்தினராக கவுரவித்ததோடு, அவரின் 'அருள் உரை'யை வழங்கச் சொல்லி, கைதட்டி ரசித்து, மகிழ்ந்திருக்கிறார்கள். 'குமுதம் ரிப்போர்ட்டர்' வார ஏட்டுக்கு பேட்டி அளித்துள்ள அந்த பார்ப்பன நடிகர், கலைஞர் ஆட்சியிலிருந்திருப்பாரே யானால், ஜெயேந்திரரைக் கைது செய்திருக்க மாட்டார். இதை கலைஞருடன் பேசியபோது, நான் தெரிந்து கொண்டேன் என்று வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

தமிழ்நாடு அரசே - இப்படி, சங்கராச்சாரிகளைக் காப்பாற்றி, "மகான்களாக" அங்கீகரிக்கும்போது துவாரகா பீட சங்கராச்சாரியும், உத்ரகாண்ட் அரசும், காஞ்சி சங்கராச்சாரியை அங்கீகரிக்க மறுத்தால், இராம கோபாலன்களால் பொறுத்துக் கொள்ள முடியுமா? அதனால் தான், ஆவேசமாக பொங்கி எழுந்து விட்டார் போலிருக்கிறது.

# படித்துப் பார்க்காமல், கையெழுத்துப் போடச் சொல்லும் பார்ப்பனர்கள்

*புரோகிதம், மதம், பார்ப்பனியம் எனும் தலைப்பில் பெரியார் எழுதிய அறிவுக் களஞ்சியம்.*

***— பெரியார் —***

நான் படித்தவன் என்று சொல்லிக் கொள்ளும் கூட்டத்தில் சேர்ந்தவனல்லன். ஏனெனில், எனது 10 ஆவது வயதிலேயே எனக்குப் படிப்பு வராதென்றும், பள்ளியில் ஒழுங்காய்ப் படிக்க மாட்டேன் என்றும், மிகவும் துஷ்டப் பிள்ளை என்றும் எனது பெற்றோர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, என்னை என் தகப்பனார் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதை நிறுத்தி, தனது வியாபாரத்திற்கு அனுகூலமாய் இருக்கும்படி கடையிலேயே வைத்துக் கொண்டார்.

இப்போது எடுத்துக்கொண்ட விஷயமாய் எனக்கு உள்ள எண்ணம் ஏறக்குறைய அந்த வயது முதற் கொண்டே எனக்கு இருந்து வந்தாலும், பள்ளியில் படித்ததாலேயோ, ஆராய்ச்சியினாலேயோ அல்லாமல் பல பெரியோர்களிடம் பேசிப் பேசி அறிந்ததினாலும், உலகானுபவத்தினாலும், ஆலோசனைகளுக்கும் பகுத்தறிவுகளுக்கும் மதிப்புக் கொடுத்ததாலேயே ஆகும். மற்றும், இதுமாதிரி காரியங்களில் இகழ்ந்து பேசுவதும் உண்டு. இம்மாதிரி நான் பேசுங்கால் எனது வீட்டார்கள் உட்பட அநேகர் என்னை அக்காலம் முதற்கொண்டே பலமாய் நாஸ்திகன் என்றும், மதத் துவேஷி என்றும் வெறுப்பார்கள். என்னை வெறுத்தாலும் எனது எண்ணங்கள் இம்மாதிரி விஷயங்களில் ஆலோசிக்க ஒரு சிறிதும் மாறுபடாமல் இருந்து வந்ததோடு, இப்போதுதான் அவற்றை வெகு தாராளமாய் எடுத்துச் சொல்லவும் பலர் கூடிக் கேட்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

பார்ப்பனீயப் புரோகிதப் பகிஷ்காரம் என்னும் இவ்விஷயம் இதன் பெயரைப் பார்க்கும்போதே பார்ப்பனப் புரோகிதத்தை மாத்திரம் விலக்கிவிட்டு - அந்த இடத்தில் பார்ப்பனரல்லாத புரோகிதரை வைத்து அச்சடங்குகளைச் செய்வது என்பதாகப் பலருக்குத் தோன்றலாம். இச்சங்கத்தின் கருத்து அதுவல்லவென்றே நான் இதில் பேச ஒப்புக் கொண்டிருக்கிறேன். அப்படியில்லையானால் இச்சங்கமே அவசியமில்லை. இவ்விஷயத்தின் கருத்தே மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டும் என்பதும், மனிதன் தனக்குள்ளாகவே, தான் மற்றவனைவிடப் பிறவியில் தாழ்ந்தவன் என்கிற உயர்வு - தாழ்வு உணர்ச்சி போய், தன்னம்பிக்கையும் சுயமரியாதையும் ஏற்பட வேண்டும் என்பதுதானே அல்லாமல் வேறல்ல. ஆனால், பார்ப்பனீயப் புரோகிதப் பகிஷ்காரம் என்பதில் அவ்வித அர்த்தம் காண்கிறதே என்று கேட்பார்களானால் அதற்கு நான் சொல்லும் பதில் புரோகிதம் என்று சொல்லும் வார்த்தையும், அதில் பிறக்கும் அச்சடங்கு - அதாவது திவசம், திதி, தடசிரார்த்தம், பிண்டம், புண்ணியாவர்ச்சனம், சாந்தி, கருமம், சங்கல்பம், தானம், பிதிர்தேவதை, பிதிர்லோகம் முதலியவைகள் பார்ப்பனர்களே ஏற்படுத்தியதாலும், இவைகளும் இவை போன்ற பல சடங்குகளும் பார்ப்பனியத்திலிருந்தே தோன்றியதாலும், பார்ப்பனீயம் தான் இம்மாதிரி மூட நம்பிக்கைகளுக்கு தாயகமாகவும், மக்கள் உயர்வு - தாழ்வு முதலிய கற்பனைகளுக்கும் ஆதாரமாகவும் இருப்பதால், பார்ப்பனீயமே முதலில் ஒழிய வேண்டுமென்கிற கருத்தைக் கொண்டு அப்பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது என்றே சொல்லுகின்றேன்.

குருட்டு நம்பிக்கைகளும், மூட வழக்கங்களும் ஒழிய வேண்டுமானால், முதலாவது பார்ப்பனீயம் ஒழிந்தாக வேண்டும். பார்ப்பனன் ஒழிய வேண்டுமானால் - பார்ப்பான் உயர்ந்தவன், நாம் அவனைவிடத் தாழ்ந்தவன் என்கிற உணர்ச்சி ஒழிய வேண்டும். ஆதலால்தான், முதற்படியாக பார்ப்பான் உயர்ந்தவன் என்ற உணர்ச்சி ஒழிய வேண்டும். பார்ப்பான் உயர்ந்தவன் என்று எண்ணுவதற்கும், ஆதாரமாயிருப்பதற்கும் அனுகூலமான பார்ப்பனனைக் கொண்டுதான் புரோகிதம் முதலிய சடங்குகள் செய்வது என்கிற வழக்கமும் உணர்ச்சியும் ஒழிந்து விட்டால், அடுத்தபடியில் அப் புரோகிதம் என்கிற மூட வழக்கங்களின் தத்துவங்களை எடுத்துச் சொல்லி, அதிலிருந்து அர்த்தமற்ற தன்மையையும் எடுத்துக் காட்டி, அவற்றை ஒழிப்பதற்கும் அனுகூலமாயிருக்கும். இல்லாதவரை, பாமர ஜனங்களுக்குள் ஏதோ ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்துவதுபோல் நினைத்து பயப்பட இடமுண்டாகிவிடும். ஏனெனில், அம்மாதிரியான விஷம்தான் நான் முன் சொன்னதுபோல், பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே நமது மக்களுக்குள் புகுத்தப்பட்டிருக்கின்றது. அவ்விஷத்தைப் படிப்படியாகத்தான் கீழிறக்க வேண்டும்,. அவசரப்படுவதும், விதண்டாவாதம் பேசுவதும் காரியத்திற்கு உபயோகப்படாததாய்ப் போய்விடும். எனவே உயர்ந்த சாதி என்று எண்ணுகிற உணர்ச்சி ஒழிந்தவுடன், அதனால் ஏற்பட்ட மற்ற அசம்பாவிதங்களை ஒழிப்பது வெகு சுலபமாகி விடும் என்கிற எண்ணந்தானேயல்லாமல், பார்ப்பனர் வரும்படியைக் கெடுத்து அதை மற்றவருக்குக் கொடுக்க வேண்டுமென்பதல்ல. தவிர, மேற்சொன்ன புரோகிதம் என்கிற சடங்குகள் நமக்கு எதன் மூலமாய்ப் புகுத்தப்பட்டது என்று பார்த்தால், மதம் என்பதை ஆதாரமாய் வைத்துப் புகுத்தப்பட்டிருக்கிறது.

பொதுவாக, இந்துமதம் என்றால் மக்கள் பிறவியில் உயர்வு - தாழ்வு என்பதைக் கற்பிப்பது. இவைகளைப் பற்றி ஆராய்வோமென்றால் இவைகள், ‘வேதத்தில் உள்ளவை’ என்றும், ‘வேதந்தான் இந்துமதம்’ என்றும் சிலர் சொல்லி விடுகிறார்கள். சரி அந்த வேதத்தை யாவது பார்க்கலாம் என்றால், ‘அதை நீ கண்ணால் பார்த்தால் கண்ணைக் குத்த வேண்டும்; காதால் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்’ என்று சொல்லிவிடுகிறார்கள்.

வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று தெரிந்து கொள்ளுவதற்குக்கூட நமக்கு இடமில்லையானால், நாம் அதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும். எவனாவது நம்மிடம் வந்து, ‘உனக்குக் கொஞ்சம் ரூபாய் தருகிறேன். பெற்றுக் கொண்டதற்காக இந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போடு’ என்று சொன்னால், அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்துத்தானே கையொப்பம் இடுவோம். ‘அதை நீ பார்க்கக் கூடாது. நான் காட்டுகிற இடத்தில் கையெழுத்துப் போட வேண்டியதுதான் பணம் பெற்றுக் கொள்ளுகிறவன் கடமை’ என்று யாராவது சொன்னால், பேசாமல் கையெழுத்துப் போட்டு விடுவோமா? அதில் என்ன எழுதியிருக்கிறது? எத்தனை ரூபாய்க்கு எழுதி இருக்கிறது? என்பவைகளைத் தெரிந்து கொள்ளாமல் கையெழுத்துப் போடுவது முட்டாள்தனம் என்று உணர மாட்டோமா? நம்மைப் பார்த்து, நீ இந்து மதஸ்தன் இந்து மதம் என்பது வேதத்தை ஒப்புக் கொள்ளுவது அதிலுள்ள சடங்குகளை நீ ஒப்புக் கொள்ள வேண்டும். ஒப்புக் கொள்வது, என்பது பார்ப்பனனுக்குப் பணம் கொடுப்பதும் அவர்கள் காலில் விழுவதும்தான். ஆதலால், எனக்குப் பணம் கொடு, என் காலில் விழுந்து கும்பிடு, என் காலைக் கழுவித் தண்ணீரைக் குடிப்பது உனக்கு மோட்சம் கிடைக்கச் செய்யும் என்று பார்ப்பனன் சொல்லுவானேயானால், ‘சரி நாம் அப்படியே செய்யலாம். ஆட்சேபம் இல்லை. ஆனால், அந்த வேதத்தைக் கொஞ்சம் காட்டுங்களேன் அதில் அப்படி எழுதியிருக்கிறதா என்பதைக் கொஞ்சம் கண்ணால் காண்போம்’ என்றால், - ‘நீ அதைப் பார்க்கக் கூடாது பார்த்தால் பாவம்’ என்று சொல்லும்போது, நாம் எப்படி அம்மதத்தை ஒப்புக் கொள்ள முடியும்? முன் சொன்னதுபோல், படித்துப் பார்க்காமல் கையெழுத்துப் போடக்கூடிய அவ்வளவு மூடர்களாய் நாம் இருந்தால் தானே, படித்துப் பார்க்காமல் இந்துமதத்தை ஒப்புக் கொள்ளுவதோ அல்லது அதில் இருக்கிறதாகச் சொல்லுகிறபடி நடப்பதோ முடியும்?

இந்து மதம் என்கிற ஒரு மதம் தவிர, வேறு மதக்காரன் எல்லோரும் தங்கள் தங்கள் மதங்களையும், கொள்கைகளையும் தங்கள் மதக்காரர்கள் எல்லோரையும் படிக்கச் செய்வதுடன், வேறு மதக்காரர்களும் படிக்கும் படியாக அந்தந்த பாஷைகளில் தங்கள் சொந்தச் செலவில் அச்சிட்டு, இலவசமாக வழங்குகிறார்கள். ஆனால், நம்முடைய மதம் என்கிற இந்துமத சம்பந்தமான வேதம் என்பதையோ, பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் கண்ணில் கூடப் பார்க்கக் கூடாது காதால்கூடக் கேட்கக் கூடாது, நெஞ்சினால்கூட நினைக்கக் கூடாது என்கிறார்கள்.

நமது இந்துமதம் என்பதையாவது சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறார்களா அல்லது ஒப்புக் கொள்ளும்படி செய்திருக்கிறோமா என்று பார்த்தால் அதுவும் இல்லை.

எப்படியென்றால், அரசியல் சீர்திருத்தம் என்னும் பேரால் பல மதங்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, சட்டசபை ஸ்தானங்களுக்கு ‘கிறிஸ்தவ மதத்தின் பேரால் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவத் தொகுதி என்று சில ஸ்தானங்களும் முகமதிய மதத்தின் பேரால் முகமதியர்களுக்கு முகமதியத் தொகுதி என்று பல ஸ்தானங்களும் ஒதுக்கி வைத்துக் கொடுக்கப்பட்டிக்கின்றன. அப்படியிருக்க, இந்து மதம் என்னும் ஒரு மதம் இருக்குமானால், அதற்கும் ஏதாவது சில ஸ்தானங்களை இந்துத் தொகுதி என்பதாக ஒதுக்கி வைத்திருப்பார்கள் இல்லையா? அப்படி ஏதாவது ஒதுக்கப்பட்டிருக்கின்றதா என்பதை யோசித்துப் பாருங்கள். அல்லாமலும், இந்துக்கள் என்கிற நாம் சட்டசபைக்கு நிற்க வேண்டுமானால், எந்தப் பேரால் நிற்கிறோம் என்பதைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள். முகமதியர் அல்லாதார் தொகுதி என்கிற பெயரால் தானே நிற்கிறோம்! முகமதியரல்லாதார் என்றால் என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரியுமா? முகமதிய மதக் கோட்பாட்டின்படி ‘காபிர்’ என்றும், அல்லது ‘மதம் இல்லாதவன்’ என்றும்தான் பொருள்படும். நாம் மதமற்றவர்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? இந்தப் பெயரை வேறு ஒருவரும் நமக்குச் சூட்டவில்லை; நாமே தான் சூட்டிக் கொண்டு, ‘முகமதியரல்லாதார் தொகுதிக்கு நான் நிற்கிறேன்’ என்கிறோம். நமது சட்டசபை மெம்பர்கள் எல்லாம் முகமதியரல்லாதாரே தவிர, இந்துக்களல்லர்.

இந்துமத பரிபாலனச் சட்டம் ஏற்படுத்தியதைப் பார்த்து சப்தம் போட்ட பெரிய பெரிய இந்து மத வருணாசிரம தர்மிகளும், இந்துமதத் தலைவர்களும், இந்து மதத்தைக் காப்பாற்றப் பிரச்சாரம் செய்த பத்திராதிபர்களும் இன்றைய தினம் இந்திய சட்டசபையில், முகமதியரல்லாதாராகத்தான் அங்கம் பெற்றிருக்கின்றார்கள். காரணம் என்ன? முகமதியல்லாதார் ஆக வேண்டுமென்றா? அல்லவே அல்ல. பின் என்னவென்றால் இந்து மதம் என்று ஒரு மதம் இருக்கின்றதையும், அதன் கொள்கைகள் என்ன என்பதையும் ருஜூப்பிக்க முடியாததாலேயே அல்லாமல் வேறல்ல. இப்படிப்பட்டவர்கள் இந்துமத பரிபாலனச் சட்டத்தைப் பார்த்து, ‘மதம் போச்சுது மதம் போச்சுது’ என்று சப்தம் போட்டார்கள் என்றால் நமது பணத்தைத் தின்றுக் கொழுப்பதால் ஏற்படும் அந்த ‘தம்’ போய்விடுமே என்கிற பயத்தினாலேயே அல்லாமல் வேறில்லை. மற்றபடி, அந்தச் சட்டத்தினால் இப்பொழுது இருப்பதாய்ப் பாசாங்கு பண்ணும் மதத்திற்கு என்ன குறைவு, எந்தப் பிரிவினால் ஏற்பட்டுவிட்டது?

தவிரவும், ‘மதத்தில் சர்க்கார் புகுந்துவிட்டார்கள், சர்க்கார் புக நம் மந்திரிகள் இடம் கொடுத்து விட்டார்கள்’ என்று சப்தம் போட்டார்களே, சர்க்கார் எதில் புகுந்து விட்டார்கள்? எப்பொழுது புகுந்து விட்டார்கள்? இதற்கு முன்பு புகவில்லையா என்பதற்கு இவர்கள் பதில் சொல்ல முடியுமா? இந்துமத சாமியின் நெற்றியில் வைக்கும் நாமம் (குறி) வடகலையா? தென்கலையா? என்பதைக் கண்டுபிடிக்க, நமது மத ஆதாரங்களான நமது வேத சாஸ்திர நூல்களில் நமக்கு முடிவதில்லை. வெள்ளைக்கார ஜட்ஜூ சொன்னால் தான் நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். நமது கோயில்களில் தேவார பாராயணம் செய்யலமா, வேண்டாமா என்பதற்கு வெள்ளைக்கார கோர்ட்டால் முடிவு பெற வேண்டியிருக்கிறது. இப்படி இருக்கும்போது, நமது மதத்திற்கு ஏதாவது பொதுக் கொள்கை உண்டா? சுயமரியாதை உண்டா? ஆகவே,நமது மத அஸ்திவாரமே அதன் தத்துவமே நமக்கு இன்னது என்று சொல்ல முடியாமலிருக்கும்போது, அதிலிருந்து ஏற்பட்ட ஆபாசக் கட்டுப்பாடுகளைப் பற்றியும், அர்த்தமற்ற சடங்குகளைப் பற்றியும் கவலை செலுத்துவது எவ்வளவு முட்டாள்தனமான காரியம் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். மதச் சடங்குகளின் யோக்கியதையே இப்படி இருக்கும்போது இச்சடங்குகளைப் பார்ப்பனர்களைக் கொண்டு செய்வதா அல்லது பார்ப்பனரல்லாதாரைக் கொண்டு செய்வதா என்கிற கேள்விகளுக்கு ஏதாவது அர்த்தமிருக்கிறதா? ஒருவனைப் பந்தியிலே உட்கார வைக்க வேண்டாம் என்றால், ‘இலை கிழிந்திருக்கிறது!’ என்று சொல்லுவதில் பிரயோஜனமென்ன? அந்தப் பழமொழிபோல் இருக்கிறது யாரைக் கொண்டு புரோகிதம் செய்விக்கிறது என்கிற விஷயம்.

மதத்தின் பேரால் இப்பார்ப்பனர்கள் நம்மிடமிருந்து வாங்கும் வரிப் பணத்திற்கு ஏதாவது ஒழுங்குண்டா? முறையுண்டா? வரவு செலவுக் கணக்குச் சொல்லுவதுண்டா? ஒன்றுமில்லாமல், ஒவ்வொரு மனிதனையும் விடாமல், அதுவும் அவன் கர்ப்பத்தில் தரிக்கும் முன்பே காப்பதான முகூர்த்தம் என்பதாகவும், கர்ப்பம் தரித்தால் சீமந்த முகூர்த்தம் என்பதாகவும், பிறந்துவிட்டால் ஜாதகரணம், நாமகரணம், தொட்டிலில் போடுதல், பாலூட்டுதல்,

(4 ஆம் பக்கம்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 18.03.2010

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ‘பெரியாரியலைப் பரப்புவதில் தீவிரமாக உழைத்தவர்’ இருகூர் சிவராசு நினைவுக் கூட்டத்தில் அனைத்துக் கட்சியினர் பாராட்டு

கழகத் தோழர் இருகூர் ஆ. சிவராசு முதலாமாண்டு நினைவேந்தல் பொதுக் கூட்டம் 7.3.2010 ஞாயிறு மாலை 6 மணியளவில் இருகூர் சுங்கம் திடல் மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தோழர் சிவராசு மகன் சி. உமாசங்கரின் கல்வி உதவித் தொகையாக ரூபாய் ஒரு லட்சம் வைப்பு நிதியாக வங்கியில் போடப் பட்டு, அதற்கான காசோலை அவர் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வாழ்நாள் முழுதும் தந்தை பெரியார் கொள்கையேற்று வாழ்ந்து 52 ஆவது அகவையில் 30.1.2009 அன்று உயிர் நீத்த தோழர் சிவராசு, இன, மொழி, நலன் காக்க பெரியார் இயக்கம் மேற்கொண்ட பல போராட்டங்களில் பங்கேற்று, பலமுறை சிறைச் சென்றவர். தனது இளமைப் பருவத்தில் இருகூர் அங்காளம்மன் கோவில் திருவிழாவிலேயே பக்தர்களோடு கலந்து கடவுள் மறுப்போடு கறுப்புச் சட்டையுடன் சென்று தீக்குண்டத்தில் இறங்கிய துணிச்சல் மிகுந்த நாத்திகர். பெருத்த சிரமங்களுக்கிடையே இருகூரில் தாய்த்தமிழ் பள்ளியை நடத்தி வந்த சிறந்த தமிழ்ப் பற்றாளர். தொடர் முயற்சி மேற்கொண்டு மறைந்த பெரியார் பெருந்தொண்டர். மொழிப் போர் தியாகி இருகூர் தீவிரம் அவர்களின் குடும்பத்திற்கு மொழிப் போர் தியாகிகள் ஓய்வூதியப் பயனைப் பெற்றுத் தந்தவர். பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட சிறந்த மனிதாபிமானி.

நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு இருகூர் தந்தை பெரியார் படிப்பக பொறுப் பாளரும், சிவராசுவின் நெருங்கிய நண்பருமான இ.க.சண்முகம் தலைமையேற்றார். கழக ஒன்றிய செயலாளர் இரா. பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார். திருப்பூர் மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, ம.தி.மு.க. மாவட்ட பிரதிநிதி பெ. இராசேந்திரன், கலங்கல் வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர்கள் இ.ச. திருநாவுக்கரசு, அ.ப. சிவா, நொய்யல் இலக்கிய வட்டத்தைச் சார்ந்த கவிஞர் இராமமூர்த்தி ஆகியோர் அறிமுகவுரையாற்றினர்.



இருகூர் பேரூராட்சி மன்ற உறுப்பினர் இ.எஸ்.எ. தம்பி, தி.மு.க.வைச் சேர்ந்த இ.வே. மணி, ம.தி.மு.க.வைச் சேர்ந்த இ.கி.கு. சந்திரசேகரன், சூ.பெ. கருணாநிதி, அ.தி.மு.க.வைச் சேர்ந்த எம்.கே.எம்.ஆனந்தன், தே.மு.தி.க.வைச் சேர்ந்த காட்டன் ஆர். செந்தில், தே. செந்தில்ராஜ் (சி.பி.எம்.), ஆ. பாலசுப்பிரமணியன் (சி.பி.ஐ.) ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர் சிவராசின் படத்தைத் திறந்து வைத்து, மகனுக்கான கல்வி உதவித் தொகையான ரூபாய் ஒரு லட்சத்தை, தோழரின் துணைவியார் சமுனாராணியிடம் வழங்கி நினைவேந்தல் உரையாற்றினார். கழகத் பொதுச் செயலாளர் கு. ராமகிருட்டிணன், சிவராசு இயக்கத்திற்கு ஆற்றிய பணிகளையும், மக்களிடம் எடுத்த நன்மதிப்பையும் நினைவுகூர்ந்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில், பெரியார் இயக்கத்திற்கும், பெரியார் தொண்டனுக்கும் சமூகம் வழங்குகின்ற அங்கீகாரத்திற்கு தோழர் சிவராசு ஒரு உதாரணம் என்று குறிப்பிட்டார். சிவராசின் சகோதரர் ராசாமணி, மு. செந்தில்குமார் ஆகியோர் நன்றியுரையாற்றினர். இந்த நிகழ்ச்சி ஒரு நெகிழ்ச்சியான நிகழ்வாக அமைந்தது மட்டுமல்லாமல், பயனுள்ள கருத்துப் பிரச்சாரமாகவும் அமைந்தது.

இருகூர் கோடிநாதன், இ.சு. செல்வராசு, இ.ஆ. கருப்புசாமி, இ.ம. மாணிக்க வாசகம், ப. பிரபு, இ.ஆ.கிருட்டிணன், வாசுதேவன், கி. தங்கராசு, இ.ப. நடராசு, இ.கு. செந்தில், த. தியாகு, இ.ப. ராசு, அரங்கநாதன், போடினபாதன், சிவராஜ், நீலகண்டன், பாரதிபுரம் இளங்கோ ஆகியோர் நிகழ்ச்சிக்காக உழைத்தனர்.

இருகூர் கல்வி மேம்பாட்டுக் குழுவின் சார்பாக அதன் பொறுப்பாளர்கள் பேச்சியண்ணன், வேலுச்சாமி, இ.கா. விக்னேஷ்வரன் ஆகியோர் ரூ.2000 வழங்கினர். ம.தி.மு.க. இருகூர் பொறுப்பாளர் கருப்புசாமி ஒவ்வொரு ஆண்டும் செல்வராசு மகனுக்கு கல்விச் சீருடை கொடுப்பதாக அறிவித்துள்ளார். ●

## பல்லாவரம் செல்வராசு முடிவெய்தினார்



கழகத் தோழரும், பல்லாவரத்தில் கழகப் பணிகளை முன்னின்று நடத்தியவருமான ஆ.பா. செல்வராசு, 16.3.2010 அன்று காலை முடிவெய்தினார். அவருக்கு வயது 58. சில காலமாக அவர் உடல்நலமின்றி பாதிக்கப்பட்டிருந்தார். மார்க்சிய லெனிய அரசியல் கட்சியில் முழு நேர ஊழியராக பணியாற்றிய தோழர் செல்வராசு, பிறகு பெரியாரியத்தை ஏற்று, பெரியார் திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். கடவுள் மறுப்பு, சாதி மறுப்புக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்ட அவர், தனது மகன் மகள்களுக்கு சாதி மறுப்புத் திருமணங்களையே நடத்தினார். கோவை மாநகர கழகப் பொறுப்பாளர் ராசுக்குமார், தோழர் செல்வராசுவின் மகள் ஜான்சி ராணியின் துணைவர் ஆவார். முடிவெய்திய செய்தி அறிந்து கழகத் தோழர்கள் விரைந்தனர். கழக சார்பில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். கழகக் கொடி போர்த்தப்பட்டு இறுதி ஊர்வலம் புறப்பட்டது. பெரியார் தொண்டருக்கு வீரவணக்கம் என்று கழகத் தோழர்கள் உணர்வுபூர்வமாக முழக்கங்களை எழுப்பி வந்தனர். எவ்வித மூடச் சடங்குமின்றி உடல் எரியூட்டப்பட்டது.

## பெரம்பூர் க. கந்தன் துணைவியார் எம். இராதா மறைவு



திராவிட முன்னேற்றக் கழக தலைமை நிலைய பேச்சாளரும், கலைஞர் பகுத்தறிவு பாசறையின் மாநில அமைப்பாளரும், ‘அறிவுக்கொடி’ மாத இதழ் ஆசிரியரும், பெரியார் கொள்கையில் சிறு சமரசத்திற்கும் இடம் தராத பகுத்தறிவு சுயமரியாதைப் பற்றாளருமான தோழர் பெரம்பூர் க. கந்தன் துணைவியார் எம். இராதா (வயது 58), 13.3.2010 சனிக்கிழமை இரவு 7 மணியளவில் முடிவெய்தினார். 14.3.2010 ஞாயிறு மாலை 4 மணியளவில் இறுதி ஊர்வலம் புறப்பட்டு, சென்னை பெரம்பூர் செம்பியம் மின்சார சுடு காட்டில் உடல் எரியூட்டப்பட்டது. எந்தவித மூடத்தனமான சடங்குகளும் இல்லாது இறுதி நிகழ்ச்சிகள் நடந்தன. தெருவெல்லாம் மாலைகளை கொட்டி குப்பைகள் ஆக்கக் கூடாது என்பதற்காக போடப்பட்ட மாலைகளை ஒரு வாகனத்தில் ஏற்றி தோழர் கந்தன் குப்பைகள் கொட்டும் இடத்தில் கொண்டு போய் கொட்டச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கழகத்தின் சார்பில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் மற்றும் தோழர்கள் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினர்.

## நன்கொடை – திருத்தம்

கடந்த இதழில் கரூர் கூட்டத்தில் வழங்கிய நன்கொடை என்று தவறாக செய்தி வெளி வந்துள்ளது. 6.3.2010 மேட்டூர் கழகத் தோழர் பாபு (எ) முகமது அலி - ஷகிலா ஆகியோர் இல்லத் திறப்பின்போது பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.2000/- கழகத் தலைவர் வழியாக வழங்கப் பட்டது என்று திருத்திப் படிக்கக் கோருகிறோம். (ஆர்)

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுசு ஓமம், முடி வாங்குதல் காது குத்துதல், பள்ளியில் வைத்தல், காயலா முதலியவைகளுக்குச் சாந்தி பிறகு, அவனுக்குக் கலியாணம் என்றால் பெண் பார்த்தல், பொருத்தம் பார்த்தல், நாள் வைத்தல், அதன் பின் விவாகம், அதன்பின் மேற்படி சடங்கு அவன் பிள்ளைகுட்டி பெற்றால் அதற்கும் அதன் காயலாவுக்குக் கிரகதோஷம் சாந்தி, கோவில், குளம், யாத்திரை ஆகியவைகள். இவ்வளவும் தவிர, கடைசி காலத்தில் சாவதாயிருந்தால் அதாவது சாக 10 நிமிஷங்களிருக்கும் போதே சுங்கக்காரனுக்குச் சுங்கம் கொடுத்துவிட்டுத்தான் ஒரு ஊருக்குள் நுழைய வேண்டும் என்பதுபோல, பார்ப்பானுக்கு மாடு வாங்கிக் கொடுத்தால்தான் (கோதானம்), இந்த ஜீவன் அந்த மாட்டின் வாலைப் பிடித்துக் கொண்டு மோட்சத் திற்குப் போக முடியும். இல்லாவிட்டால், மேல் லோகத்திலுள்ள நெருப்பாறு, மயிர்ப் பாலம் தாண்ட முடியாது என்று சொல்லி, மாடு கொடுக்க வேண்டி யிருக்கிறது.

மாடு கொடுத்துவிட்டாலாவது விடுகிறதா? அப்போதும் வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு, இழவுக்கு வந்தவர்களைக்கூட விசாரிக்க நேரமில்லாமல் உபத்திரவித்து, வரிசையாக வருஷம் முழுவதும் பிய்த்துப் பிடுங்கித் தின்கிறார்கள். இவ்வளவுடன் தீர்ந்து விடுகிறதா? இல்லவே இல்லை. ஒரு வருஷம் ஆனதும், ‘உன் தகப்பனார் இன்ன வருடம், இன்ன மாதம், இன்ன தினம், இன்ன திதி செத்துப் போனார் வை பணம், அரிசி, பருப்பு, உப்பு, புளி, வகையறா சாமான்கள்’ என்று கேட்பதோடு, சாப்பிட்டு அஜீர்ணம் ஏற்பட்டால் அதற்கு இஞ்சியும் சுக்கும் கேட்டு வாங்கி, ‘இவ்வளவும் கொடுத்து, நீயும் உன் பெண்சாதியும் என் காலில் விழுந்து கும்பிட்டு, கால் கழுவின தண்ணீரைக் குடியுங்கள்’ என்றும் சொல்லி மூட்டை கட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள். அம் மூட்டைகள் அனேகமாகத் தாசிகள் வீட்டிற்கு போய்ச் சேருகின்றன.

**(குடிஅரசு – 03.04.1927)**


**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**
**பத்திரிகையின் உரிமை விளக்க அறிவிக்கை**
படிவம் 4 (8வது விதி காண்க)

1. வெளியாகும் இடம் : 15, மயிலப்பர் தெரு, அயன்புரம், சென்னை–23.
2. வெளியாகும் காலம் : வாரம் ஒரு முறை
3. அச்சடிப்பவர் பெயர் : எஸ். தீமாஸ்
   இனம் : தமிழர்
   முகவரி : லில்லி சூசை ஆப்செட், 8 முகமது உசேன் சந்து, சென்னை–14.
4. பதிப்பாளர் பெயர் : ஆனூர் செகதீசன்
   இனம் : திராவிடர்
   முகவரி : 15, மயிலப்பர் தெரு, அயன்புரம், சென்னை–23.
5. ஆசிரியர் பெயர் : விடுதலை இராசேந்திரன்
   இனம் : திராவிடர்
   முகவரி : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரிகை உரிமையாளரும் கூட்டாளிகளும் பெயரும் முகவரியும் : இல்லை

நான் இதன் மூலம் மேலே காணப்படும் விவரங்கள்யாவும் எனக்குத் தெரிந்த வரை முற்றிலும் உண்மையென நம்பகமாக அறிவிக்கிறேன்.

(ஒப்பம்)
நாள்: 15–3–2010 ஆனூர் ஜெகதீசன்
இடம்: சென்னை. வெளியிடுபவர் கையொப்பம்




“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக் கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9840940400


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 19th March 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 மார்ச் 25, 2010 புரட்சி 9 முழக்கம் 11 விலை: ரூ.2.50

## பெரியார் எழுத்துகளைத் தவிர 139 நூல்கள் அரசுடைமை

*மக்கள் எதிர்ப்பு இல்லாத, வரியற்ற நிதிநிலை அறிக்கையை தி.மு.க. ஆட்சி தாக்கல் செய்துவிட்டது. மேல்பட்டப்படிப்புக் கல்விக் கட்டணம் ரத்து, பொறியியல் கல்லூரியில் தமிழ் வழிக் கல்வி, பள்ளிக் கல்வி வளர்ச்சிக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு போன்ற வரவேற்கத்தக்க அம்சங்கள், அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. இவ்வாண்டு மேலும் 22 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே 117 தமிழ்ச் சான்றோர் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. இதில், 110 அறிஞர்களின் நூல்களை நாட்டுமையாக்கியது, தி.மு.க அரசு என்று நிதிநிலை அறிக்கை கூறுகிறது. ஆக, 139 தமிழறிஞர்கள், சிந்தனையாளர்கள் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டும், பெரியார் நூல்கள் மட்டும் அப்பட்டியலில் இன்னும் இடம் பெறாமலேயே இருக்கிறது. காரணம், கி. வீரமணியை திருப்திப்படுத்துவதற்குத்தான். பெரியார் உருவாக்கிய அறக்கட்டளைகளை வைத்திருக்கும் கி. வீரமணி, பெரியாரின் முழுமையான வரலாற்று நூலைக்கூட வெளியிடவில்லை. சாமி சிதம்பரனார் எழுதிய தமிழர் தலைவர் எனும் வரலாற்று நூல் 1937 ஆம் ஆண்டு காலகட்டத்தோடு நின்று விட்டது.*

*'இந்து' ராம் போன்ற பார்ப்பனர்களே, கி.வீரமணியின் முன்னிலையிலேயே பெரியாருக்கு வரலாற்று நூல் ஆங்கிலத்தில் வெளி வராததை சுட்டிக் காட்டுகின்றனர்.*

*ஆனால், பார்ப்பனர்களே, பெரியாருக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள் என்று, கி. வீரமணி கூறுகிறாரே தவிர, அப்படி ஒரு வரலாற்று நூல் வெளிவராததை தனக்கு ஏற்பட்ட அவமானமாக அவர் கருதத் தயாராக இல்லை.*

*'குடிஅரசு' வழக்கை விசாரிக்கும் உயர்நீதிமன்ற நீதிபதிகளே பெரியார் நூல்கள் ஏன் அரசுடைமையாகவில்லை என்ற கேள்வியை எழுப்பியும், தமிழக அரசும் காதில் போட்டுக் கொள்ள தயாராக இல்லை.*

# மதமாற்றம் : பெரியார் கருத்து என்ன?

## பெரியார்

***மதமாற்றம் பற்றி பெரியார் கருத்து என்ன? தீண்டாமையிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு மட்டுமே, மத மாற்றத்தை மக்களுக்கு தாம் முன்மொழிவதாகப் பெரியார் கூறுகிறார். மற்றபடி முஸ்லிம் மதத்தில் உள்ள மூட நம்பிக்கை, பெண்ணுரிமை மறுப்பு கருத்துகள், சுயமரியாதைக்காரர்களுக்கு உடன்பாடானது அல்ல என்றும் கூறுகிறார். அம்பேத்கர், மதமாற்றத்தை அறிவித்தபோது, ஒரு தோழர், பெரியாருக்கு கடிதம் எழுதி, மதத்தை மறுக்கும் சுயமரியாதைக்காரர்கள், மத மாற்றத்தை ஆதரிக்கலாமா என்று கேட்டதற்கு, பெரியார் விளக்கமளித்து, 'குடி அரசு' ஏட்டில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியை வெளியிடுகிறோம்.***

"எந்த விஷயத்துக்கும் கொள்கைகளுடன் அனுபவ ஞானமும் இருந்தால் தான் அதை மனிதத் தன்மை என்று சொல்லலாமே ஒழிய, மற்றபடி அனுபவ சாத்தியத்துக்கு இணங்காத கொள்கைகள் எதுவானாலும் அதை புஸ்தகப் பூச்சி என்றுதான் சொல்ல வேண்டும் அல்லது வெறும் அபிப்பிராயத்துக்கு மாத்திரம் பொருமானவர்களே ஒழிய காரியத்துக்கு பொருமானவர்கள் அல்ல என்று சொல்ல வேண்டும்.

வெளிப்படையாய் நாம் பேசுவதானால் அம்பேத்கரும், அவரைப் பின்பற்றுவோரும், நாஸ்திகர்களாவதற்கும், மதமில்லாதவர்கள் ஆவதற்கும் இஷ்டமில்லாமல், அவர்கள் மீது இருக்கும் தீண்டாமை மாத்திரம் ஒழிய வேண்டும் என்று ஆசைப்பட்டு அதற்காக முகமதியராகி விடலாம் என்று அவர்கள் கருதினால் அதில் நமக்கு இருக்கும் ஆட்சேபணை என்ன என்று கேட்கின்றோம்.

**முகம்மதிய மதத்தில் பல கெடுதிகள் இருக்கலாம். கோஷா இருக்கலாம். கடவுள் இருக்கலாம். மூட நம்பிக்கை இருக்கலாம். மதச் சின்னம், மதச் சடங்கு இருக்கலாம். சமதர்மமில்லாமலுமிருக்கலாம். இதெல்லாம் யாருக்குக் கூடாது? சுயமரியாதைக்காரருக்கு கூடாததாய் இருக்கலாம். மற்றும் பெண்ணுரிமை மாத்திரம் பேணுவோருக்கு மகமதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம். மூடநம்பிக்கை அனுஷ்டிக்காதவர்களுக்கும் முகம்மதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம். மதவேஷமும் பயனற்ற சடங்கும் வேண்டாதவருக்கு முகமதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம். நாஸ்திகருக்கும், பகுத்தறிவுவாதிகளுக்கும் முகமதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம். சமதர்மவாதிகளுக்கும், பொது உடமைக் காரர்களுக்கும் முகமதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம்.**

ஆனால் தீயர்கள், பறையர்கள், புலையர்கள், நாயாடிகள் என்று அழைக்கப்படுகின்ற - ஒதுக்கப்பட்டிருக்கின்ற - தாழ்த்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, நாயினும், மலத்திலும் புழுத்த விஷக் கிருமிகளிலும் கேவலமாக மதிக்கப்பட்டு வருகிற மக்களிடம் - தங்கள் மீது இருக்கும் தீண்டாமை மாத்திரம் ஒழிந்தால் போதும் என்று கருதிக்கொண்டு இருக்கும் மக்களிடம் நமக்கு வேலை உண்டா? இல்லையா என்று கேட்கின்றோம்.

உண்மையாகவே சுயமரியாதைக்காரருக்கு இந்தச் சமயத்திலும் வேலை இருக்கிறது என்றுதான் நாம் கருதுகிறோம்.

ஏனெனில், அவன் கிறிஸ்தவனாகி, கிறிஸ்தவப் பறையன், கிறிஸ்தவச் சக்கிலி, கிறிஸ்தவப் பிள்ளை, கிறிஸ்தவ நாயக்கன் என்று தீண்டாதவனாகவே இருப்பதைவிட, பறத்துலுக்கன் என்றோ, சக்கிலிய முகமதியன் என்றோ, தீய முஸ்லீம் என்றோ அழைக்க இடமில்லாமலும், அழைக்கப்படாமலும் இருக்கும்படியான நிலையிலும் மற்ற சமூகக்காரர்களோ மதக்காரர்களோ அவ்வளவு சுலபமாக இழிவுபடுத்தவோ, கொடுமையாய் நடத்தவோ முடியாத சுயமரியாதை அனுபவமும் உள்ள நிலையிலும் இருக்கும் ஒரு மதத்திற்கு "எப்படியாவது தீண்டாமையை ஒழித்துக் கொள்ள வேண்டும்" என்கின்றவன் போனால் இதில் சுயமரியாதைக்காரனுக்கு என்ன நஷ்டம் என்று கேட்கின்றோம். அன்றியும் "சரி எப்படியாவது சீக்கிரத்தில் தீண்டாமையை ஒழித்துக் கொள்" என்று சொல்வதிலும் என்ன தப்பு என்றும் கேட்கின்றோம்.

நமக்குக் கடிதம் எழுதின நண்பர், "இந்து மதத்தில் தீண்டாமை இருக்கிறது. இஸ்லாம் மதத்தில் பார்க்காமை இருக்கிறது. பெண்களுக்கு உறை போட்டு மூடி வைத்து இருக்கிறார்கள்" என்று எழுதி இருக்கிறார். அது (உறை போட்டு வைத்திருப்பது) உண்மை என்றும் தவறானது என்றுமே வைத்துக் கொள்ளுவோம். இது பெண்ணுரிமை பேணுவோர்கள் கவனிக்க வேண்டிய காரியமே ஒழிய தீண்டாமை விலக்கு மாத்திரம் வேண்டும் என்று கருதுகின்றவர்கள் யோசிக்க வேண்டிய காரியம் அல்ல என்பது நமது அபிப்பிராயம்.

இஸ்லாம் மார்க்கம் தாண்டவமாடும் துருக்கி, ஈஜீப்ட், பர்ஷியா முதலிய இடங்களில் மூடி கிடையாது என்பதோடு, அம்பேத்கர் தமது மனைவிக்கு மூடி போடா விட்டால் எந்த முஸ்லீமும் அவரை கோவிலுக்கு வரவேண்டாம் என்று சொல்லிவிட முடியாது. எப்படி இருந்தாலும் நாம் அதைப் பற்றி இப்போது விவகரிக்க அவசியமில்லை என்று கருதுகிறோம்.

ஆகவே, தோழர் அம்பேத்கர் மதம் மாறுவதில் எந்த மதம் மாறப் போகிறார் என்பது நமக்குத் தெரியாது. உலகாயுத மதத்தையோ, நாஸ்திக மதத்தையோ தழுவவோ அல்லது முஸ்லீம் மதத்தைத் தழுவவோ போகிறாரோ என்பதும் நமக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் வெறும் ஏமாற்றமும் சூழ்ச்சியும் கொண்டதும், சண்டாளன், பாவி, இழி குலத்தவன், தீண்டத்தகாதவன் என்று மனிதனை வெறுத்துத் தள்ளுவதும், ஒருவர் உழைப்பை ஒருவர் கொள்ளை கொள்ளுவதுமான காரியங்களை மதக்கட்டளையாகக் கொண்டதுமான இந்து மதத்தை விட்டுவிடுகிறேன் என்றால், அதைப் பொருத்த வரையில் முதலில் அதற்கு உதவி செய்ய வேண்டியது ஒவ்வொரு சுயமரியாதைக்காரனுடையவும் கடமை அல்லவா என்று கேட்கின்றோம்.

இந்து மதம் சீர்திருத்தமடைந்து வருகிறது என்றும், தீண்டாமை ஒழிக்கப்பட்டு வருகிறது என்றும் சில மூடர்களும், சூழ்ச்சிக்காரர்களும் சொல்லுகிறார்கள். அதை நாம் சிறிதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இந்து மதம் சீர்திருத்தமடைந்து வரவில்லை. இந்துமதம் ஒழிந்து வருகின்றது என்றுதான் சொல்லுவோம்.

இந்து மதத்தில் சீர்திருத்தத்திற்கு இடமில்லை. அதை சீர்திருத்தம் செய்ய யாருக்கும் அதிகாரமும் இல்லை. இந்துமத ஆதாரங்கள் என்பவை அம்மத வேதம், சாஸ்திரம், புராணம் என்று சொல்லப்படுபவைகளைப் பொருத்ததே ஒழிய, சாமிகள் என்றும், மகாத்மாக்கள் என்றும் தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக் கொள்ளும் சில விளம்பரப் பிரியர்களைப் பொருத்தது அல்ல.

எந்த மகாத்மாவானாலும், சீர்திருத்தக்காரனானாலும், சுவாமி பட்டம் பெற்றவனானாலும், தன்னுடைய சீர்திருத்தத்தை மதம், சாஸ்திரம் அனுமதிக்கிறது என்று வேஷம் போட்டுத்தான் சீர்திருத்தம் செய்ய ஆசைப்படுகிறாரே ஒழிய வேறில்லை.

எந்த வேதமும், எந்த மதமும், எந்த சாஸ்திரமும் இந்த மகாத்மாவுக்கும், சுவாமிக்கும் சீர்திருத்தம் செய்ய எங்கும் அதிகாரம் கொடுக்கவில்லை. அது வேதத்தின் சாரமான - பகவான் வாக்கான என்று சொல்லப்படும் கீதையிலும், மனு சாஸ்திரத்திலும், பராசர் ஸ்மிருதியிலும் பச்சையாய் சொல்லி இருக்கிறது. இவற்றை விவகாரத்துக்கு இடமானது என்று சொல்லிவிட முடியாது. இன்று பொது ஜனங்களை ஏமாற்ற, தற்கால சாந்தியாக சொல்லிக் கொண்டாலும் அந்த முறைக்கும், சாஸ்திரத்துக்கும் மாத்திரமல்லாமல் பழக்க வழக்கங்களுக்கும் அரசியல் காப்பளித்துவிட்ட பிறகு இந்த விவகாரத்துக்கு இடமேது என்று கேட்கின்றோம்.

*(4 ஆம் பக்கம்)*

**தலையங்கம்**

## போப் கேட்கும் மன்னிப்பு!

*மதத்தின் கொள்கைகள் காலத்தால், தோல்வியைத் தழுவி வருவதை ஒவ்வொரு நாளும் வரும் செய்திகள் உறுதிப்படுத்தி வருகின்றன. இப்போது உலக கத்தோலிக்கர்களின் தலைவராக விளங்கும் போப், மன்னிப்புக் கேட்டுள்ள செய்தி ஒன்று வெளி வந்துள்ளது. இந்த மன்னிப்பு – கத்தோலிக்க பாதிரியார்களுக்காக கேட்கப்பட்டதாகும். பாவங்களுக்கு மன்னிப்பு வழங்கும் பாதிரியார்களே, 'பாவங்களின்' தந்தையாகி விட்டனர்.*

*ஜெர்மனி, அயர்லாந்து, ஆஸ்திரியா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா என பல்வேறு நாடுகளில் கத்தோலிக்க பாதிரியார்கள், சிறுவர்களுடன் தகாத உறவு கொண்டு வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. குறிப்பாக அயர்லாந்து நாட்டிலிருந்து அதிகமான புகார்கள், இது பற்றி போப்புக்கு வந்தன. அயர்லாந்து அரசே இது பற்றி விசாரிக்க ஆணையம் ஒன்றை அமைத்தது. விசாரணையில் பல அதிர்ச்சியான தகவல்கள் வெளி வந்தன. பல பாதிரியார்கள் சிறுவர்களுடன் உடல் உறவு கொண்டதை ஒப்புக் கொண்டுள்ளார்கள்.*

*ஜெர்மன் நாடாளுமன்றத்தின் கீழ்சபை துணைத் தலைவர், உல்ப் கேங்தியர்ஸ், போப் பெனடிக்டை சந்தித்து, குற்றமிழைத்த பாதிரியார்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார். போப் – வாடிகனில் உயர்மட்ட அதிகாரிகளைக் கூட்டி, ஆலோசனை நடத்தி, இந்த முறைகேடான உறவுகளால் பாதிக்கப்பட்டோரிடம் மன்னிப்புக் கேட்டு கடிதங்களை எழுதியுள்ளார். ஆனால், போப்பின் மன்னிப்பு கடிதம், அயர்லாந்து நாட்டில் நடந்த சம்பவத்துக்கு மட்டும்தான். இதனால் மற்ற நாட்டு கத்தோலிக்கர்கள் அனைத்து நாடுகளிலும் உள்ள தவறிழைத்த பாதிரியார்களை ஏன் கண்டிக்கவில்லை என்று, போப் மீது அதிருப்தி அடைந்துள்ளனர். அயர்லாந்து நாட்டின் கத்தோலிக்கர்களின் தலைமை பாதிரியார் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை கத்தோலிக்கர்களிடம் வலிமையடைந்து வருவதால், அவரும் மன்னிப்புக் கோரியுள்ளார். கடந்த காலங்களில் பல கத்தோலிக்க பாதிரியார்கள், இதுபோல் செய்த தவறுகளை மூடி மறைத்துவிட்டார் என்பது இவர் மீதான குற்றச்சாட்டு.*

*பிரேசில் நாட்டின் 'எஸ்பிடி' தொலைக்காட்சி நிறுவனம், 82 வயது பாதிரியார் 19 வயது இளைஞருடன் உறவு கொண்ட காட்சியை ரகசியக் காமிராவில் படம் பிடித்து கடந்த வாரம் ஒளிபரப்பியதைத் தொடர்ந்து மூன்று பாதிரியார்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.*

*'நித்யானந்தாக்கள்', 'ஜெயேந்திரர்கள்' இங்கு மட்டுமல்ல, உலகம் முழுதும் பரவியே இருக்கிறார்கள். சிறுவர்கள் இப்படி தவறான பாலுறவுக்கு பயன்படுத்தப் படுவதற்குக் காரணமே, ஊறிப் போயிருக்கும் மத உணர்வுகள் தான் என்று மிகச்சிறந்த நாத்திகர், சிந்தனையாளர் ரிச்சர்ட்டு டாக்கின்ஸ் கூறுகிறார்.*

*முதலில், பாதிரியார்கள், தங்களின் பிரசாரத்தில் பெரும் பகுதியை பாவங்கள் பற்றியும், அதைச் செய்யாமல் இருப்பது பற்றியும், அதனால் கிடைக்கும் தண்டனை பற்றியுமே பேசுகிறார்கள். இது நேர்மையற்ற பிரச்சாரம். மற்றொன்று அதிகாரத்திலுள்ள மதத் தலைவருக்கு அடிபணிவதே நல்லொழுக்கம் என்ற கருத்தை குழந்தைப் பருவத்திலே விதைத்து விடுகிறார்கள். மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களினால் தான் பாதிரியார்கள், தங்கள் விருப்பத்துக்கு சிறுவர்களைப் பயன்படுத்த முடிகிறது. முடிவாக அவர் முன் வைக்கும் கருத்துதான், மிகவும் ஆழமானது. பாதிரியார்களின் பாலியல் தவறுகள் கண்டிக்கத்தக்கதுதான். ஆனாலும், அதைவிட, கடுமையான குற்றம், ஒரு குழந்தையை கத்தோலிக்க நம்பிக்கையில் வளர்த்து, அதனால் நீண்டகாலம், உளவியல் சிதைவுக்கு அவர்களை உள்ளாக்குவதுதான் என்று டாக்கின்ஸ் கூறுகிறார்.*

*எனவே – மதத் தலைவர்கள், ஆன்மிகவாதிகளின் முறைகேடுகளுக்கு அவர்களின் அந்த செயல்பாடுகளில் குற்றங்களை தேடுவதைவிட, அந்தக் குற்றங்களை செய்வதற்கேற்ற உளவியலை உருவாக்கித்தரும், மதங்களின் கருத்தியல்களைத்தான் கேள்விக்குள்ளாக்க வேண்டியிருக்கிறது. 'பாவிகள் நரகத்தில் எரித்துத் துன்பத்துக்குள்ளாக்கப்படுவார்கள்' என்றும், பெண்கள் எப்போதுமே ஆண்களுக்கு உடைமையானவர்கள் என்றும் கூறப்படும் வாசகங்களும், அதன் மீதாக பதிந்துள்ள நம்பிக்கையுமே மிக மோசமான விளைவுகளை உண்டாக்கக் கூடியவை.*

*நித்யானந்தாவின் 'காதல்–காம காட்சிகளை' பக்கம்பக்கமாக வெளியிடும் ஊடகங்கள், அதற்கேற்ப பாதிக்கப்பட்டவர்களை பணிந்து போக வைக்கும், மத நம்பிக்கைகளையும், ஆன்மிகவாதிகளை மிகவும் உயர்ந்த 'புனிதவான்கள்' என்று மனத்தளவில் பதியச் செய்துவிட்ட மதக் கோட்பாடுகளையும் தகர்த்து எறியத் தயாராக இல்லை! இத்தகைய 'பாலியல்' வக்கிரங்கள் தொடருவதையே விரும்புகிறார்கள்; அப்போதுதானே அவர்களின் வர்த்தகம் செழிக்கும்.*

*எனவே சமூக நாகரிகத்தை சீர்குலைப்பதற்கு ஒத்திசைவான உளவியலைக் கட்டமைக்கும் மதக் கருத்தியல்களுக்கு எதிரான பிரச்சாரங்களும், மதப்பிடியிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் செயல்பாடுகளுமே, இன்றையத் தேவையாக இருக்கிறது. கடவுளைவிட மதங்கள் ஆபத்தானவை என்று பெரியார் கூறுகிறார். 'எல்லா கடவுளும் ஒன்றுதான்' என்று கூறினால், மதவாதிகள் அவ்வளவாக எதிர்க்க மாட்டார்கள். ஆனால் எல்லா மதங்களும் ஒன்றுதான். தனித்தனி மதங்கள் கிடையாது என்று கூறினால், மதக் கலவரமே, வெடிக்கத் தொடங்கிவிடும்! என்று பெரியார் அதற்கு விளக்கமளித்தார்.*

*போப்புகள் மன்னிப்புக் கேட்பது மதங்களின் தோல்வியை ஒப்புக் கொள்வதேயாகும்.*

# பிரச்சினைகள் தீர, வழி....?

*தொல்லைகள் நீங்கி வாழ்வதற்கான வழிகளை 'தினமலர்' ஆன்மிக மலர் 'ராம நவமி' சிறப்பு இதழில் வெளியிட்டிருக்கிறது (மார்ச் 20, 2010) இதன்படி -*

> *"வீட்டில் யாருக்காவது உடல் நலமில்லை என்றால், வால்மீகி இராமாயணம் யுத்த காண்டத்திலுள்ள ஆதித்ய ஹ்ருதயத்தை எடுத்து வைத்துக் கொண்டு, மனப்பாடம் (பாராயணம்) செய்ய வேண்டும்.*
>
> *கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், எதிரிகளால் ஏற்படும் துன்பம் ஒழியவும், யுத்த காண்டத்தில் நாகபாச விமோசன கதையைப் பக்தியுடன் படிக்க வேண்டும்.*
>
> *மங்கள நிகழ்ச்சிகள் தடையின்றி நடத்தவும், குழந்தைகள் படிப்பில் முன் னேற்றமடையவும், 'புத்திர பாக்கியம்' ஏற்படவும், குறும்பு செய்யும் குழந்தைகளை திருத்தவும் – ராம ஜனனம், சீதா கல்யாண வைபோகம், பாதுகா பட்டாபிஷேகம், விபீஷண பட்டாபிஷேகம், ராம பட்டாபிஷேகம் ஆகிய இலாமாயணத்தின் பகுதிகளைப் படிக்க வேண்டும்."*

*- என்று 'தினமலர்' அதி அற்புதமான ஆலோசனைகளை வழங்கியிருக்கிறது.*

*எனவே உடல்நலன் பெறவும், கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், எதிரிகளை சந்திக்கவும், குழந்தைகள் நன்றாக படிக்கவும், மங்கள நிகழ்ச்சிகள் நன்றாக நடக்கவும், வால்மீகி ராமாயணத்தை படிக்க வேண்டுமே தவிர, வேறு 'வெட்டி வேலைகள்' எதிலும் ஈடுபடாதிருப்பீர்களாக. மருத்துவமனை போக வேண்டாம்; குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டாம்; வாங்கிய வங்கிக் கடனை திருப்பி செலுத்த வேண்டாம்; திருமணத்துக்கு வரன் தேடித் திரிய வேண்டாம்; எல்லாவற்றையும் 'ஸ்ரீராமன்' கவனித்துக் கொள்வான்!*

*சரி, தானே!*

## "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்" இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழா



***பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் – இரண்டாம் பதிப்பை 21.3.2010 அன்று மாலை சென்னை அறிவாலயத்திலுள்ள கலைஞர் அரங்கத்தில் வே. ஆனைமுத்து தலைமையில் முதல்வர் கலைஞர் வெளியிட்டார்.***

*பெரியார் ஈ.வெ.இராமசாமி - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையின் சார்பில், 9300 பக்கங்களில் 20 தொகுதிகளாக வெளிவந்துள்ள இத் தொகுப்புகளை அறக்கட்டளையின் தலைவர் வே. ஆனைமுத்து கடும் உழைப்பால் தொகுத்துள்ளார். நிகழ்ச்சியில் கவிஞர் தமிழேந்தி, முனைவர் சோம. இராசேந்திரன், புலவர் செந்தலை கவுதமன், முனைவர் பொற்கோ, மருத்துவர் பூ. பழனியப்பன் ஆகியோர் கலைஞர் - நாத்திகராகவும், திராவிடர் இயக்கத்தின் ஒரே மூத்த தலைவராகவும் இருப்பதையும், 1974 இல் இதன் முதல் பதிப்பை முதல்வராக இருந்து வெளியிட்டதையும் நினைவு கூர்ந்து பாராட்டினர்.*

*திட்டக்குழு துணைத் தலைவர் மு. நாகநாதன், பெரியாரின் இடஒதுக்கீடு, பெண்ணுரிமை தொடர்பான ஆழமான சிந்தனைகளை விளக்கி, நோபல் பரிசு பெற்ற அமர்த்தியாசென்னுடன் ஒப்பிட்டுப் பெரியாரியலை விளக்கி, விரிவாகப் பேசினார். நூலை வெளியிட்ட கலைஞர், "பெரியாரியச் சிந்தனைகளுக்கு தமிழகத்தில் கிடைக்கிற ஆதரவு மேலும், மேலும் பெருகிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இந்தக் கூட்டமே அடையாளம். 35 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியிலே, இதன் முதல் பதிப்பை வெளியிட்டபோது, இதில் பாதியளவு கூட்டம்கூட இல்லை" என்று கூறியபோது, அரங்கம் கைதட்டலில் அதிர்ந்தது. தோழர் ஆனைமுத்துவின் கடும் உழைப்பையும், முயற்சியையும் பாராட்டிய கலைஞர், பெரியார் கருத்துகளைப் பரப்பும் இயக்கங்கள் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் போல் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.*

*பெரியார், அண்ணா, காமராசர் வரலாறுகளை பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்றும், இந்த பெரியார் தொகுப்புகளை, நூலகங்கள், கல்லூரிகளில் தமிழக அரசு பயன்படுத்த வேண்டும் என்றும், இரண்டு கோரிக்கைகளை தோழர் வே. ஆனைமுத்து முதல்வர் முன் வைத்தார். பெரியார் சிந்தனைகளுக்கு முன்பதிவுத் திட்டத்தின் கீழ் 2000 பேர் பதிவு செய்ததை குறிப்பிட்ட தோழர் வே. ஆனைமுத்து, இதற்காக தமது அமைப்பைச் சார்ந்த தோழர்கள் கடுமையாக உழைத்ததைப் பாராட்டினார். பெரியார் திராவிடர் கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் பெருமளவில் கழகத் தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். அரங்கம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது.* ●

# தோழர் பெரியார்தாசனின் கொள்கை மாற்றம்!

தோழர் பெரியார்தாசன் இவ்வாரம் வெளிவந்த இசுலாமிய இதழ்கள் அனைத்திலும் கதாநாயகனாகி விட்டார்.

கடந்த மார்ச் 12 ஆம் தேதி அரபு நாடுகளில் ஒன்றான ரியாத்தில், அவர் இசுலாத்தைத் தழுவியதாக அறிவித்ததே இதற்குக் காரணம்.

பெரியார்தாசனின் இந்த முடிவுகள் எல்லாம், நமக்கு வியப்பை ஏற்படுத்தவில்லை. பெரியார் இயக்கத்தினர், தோழர் பெரியார் தாசனை நன்றாகவே புரிந்தவர்கள் தான். பெரியார் சிந்தனைப் பள்ளியைச் சார்ந்த அவருக்கு, தமிழகம் முழுதும் பெரியார் இயக்கத்துடன் பல ஆண்டுகளாகத் தொடர்பு உண்டு என்பதும், எல்லோரிடமும் இனிமை யாகவும், தோழமையாகவும் பழகக் கூடியவர் என்பதும் எல்லோருக்குமே தெரியும். பகைமை பாராட்டாத நண்பர். மக்களிடம் பெரியார் கருத்துகளைப் பரப்புவதில் தன்னுடைய பேச்சுத் திறமையை வலிமையாகப் பயன்படுத்தியதால், பெரியார் இயக்கத் தோழர்கள் அவரை விரும்பி கூட்டங்களுக்கு அழைத்தார்கள். இப்போது பெரியார் சிந்தனைப் பள்ளியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, ஒரு மதவாதியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருப்பதால், பெரியார் இயக்கத் தோழர்கள் சிலர் நம்முடைய பெரியார் தாசன், இப்படிப் போய் விட்டாரே என்று ஆதங்கப் பட்டார்கள். அவரது கடந்த கால வரலாறுகளை உன்னிப்பாகக் கவனித்தவர்களுக்கு, இதில் வியப்பு ஏதும் இருக்காது என்பது தான் நமது கருத்து.

அவர் எப்போது பெரியார்தாசன் ஆனார் என்ற கேள்விக்கு அவரே இப்போது ஒரு வார இதழுக்கு அளித்த பேட்டியில் விளக்கமளித்துள்ளார். பச்சையப்பன் கல்லூரியில் அவர் மாணவராக இருந்த காலத்தில், பெரியார் பேச வந்தபோது, ஒரு கவிதையை எழுதிப் படிக்க விரும்பியிருக்கிறார். அப்போது அவரது உண்மைப் பெயர் சேஷாசலம். பட்டை சந்தனம், குங்குமப் பொட்டு என்று பக்தி பழமாகக் காட்சியளித்தவர். அந்தக் கவிதையை தனது பேராசிரியர் ஒருவரிடம் அவர் படித்துக் காட்டியபோது, பேராசிரியரோ மாணவர் பெயர் 'சேஷாசலம்' என்று இருக்கிறதே என்று தயங்கியிருக்கிறார். உடனே, அடுத்த விநாடியே, தன்னுடைய கவிதையை பெரியாருக்கு முன் படிக்க வேண்டும் என்ற துடிப்பில், பெரியார் தாசன் என்று மாற்றிக் கொண்டதாக அவரே குறிப்பிட்டுள்ளார்.

"அன்று பெரியார் தாசன் என்று பெயரிட்ட போது, என் தலையில் பட்டை, சந்தனம், குங்குமப் பொட்டு என்று பக்திப் பழம் போன்று காட்சி தந்தேன்" என்று அந்தப் பேட்டியில் (மக்கள் உரிமை, இதழ், மார்ச்.19) அவர் கூறுகிறார். ஆக, பெரியார் கொள்கையை ஏற்காத காலத்திலே, தனது கவிதையை பெரியார் முன் படிக்கும் ஆர்வத்துக்காக 'பெரியார் தாசனாக' பெயர் மாற்றிக் கொண்டவர் தான் பெரியார்தாசன்.

சென்னை பெரியார் திடலில் 1980-களில் நடந்த பயிற்சி முகாமில் மாணவராக பங்கேற்று, திராவிடர் கழகத்தின் பிரச்சாரகராக மேடை ஏறிய பெரியார் தாசன், படிப்படியாக தனது பேச்சாற்றலை வளர்த்து, மக்கள் செல்வாக்கைப் பெற்ற நிலையில், திராவிடர் கழகத்துடன் கருத்து வேறுபாடு எழுந்தது. செஞ்சட்டை பஞ்சாட்சரம் நடத்தி வந்த பெரியார் சமதர்மம் இயக்கத்தில் இணைந்து செஞ்சட்டைப் போட்டு, 'சமதர்மம்' பேசலானார்.

அதன் பிறகு, தலித் இயக்கங்களோடு நெருங்கி, அம்பேத்கரின் சாதி ஒழிப்பு, இந்து மத எதிர்ப்புக் கருத்துகளைப் பரப்புவதில் தீவிரம் காட்டினார். அதே காலகட்டத்தில் தன்னை புத்த மார்க்கத்தில் இணைத்துக் கொண்டு தனது பெயரை சித்தார்த்தன் என்று மாற்றிக் கொண்டார். சில காலம் சித்தார்த்தன் என்ற பெயரோடு கூட்டங்களில் பேசிய அவர், மீண்டும், தனது பெயரை பெரியார் தாசன் என்றே போடுமாறும், சித்தார்த்தனை தவிர்த்து விடுங்கள் என்று வேண்டுகோள் வைத்து, பெரியார் தாசன் ஆனார்.

பெரியார் தாசனை அழைத்துக் கூட்டங்களை நடத்துவதற்கு பெரியார் இயக்கத் தோழர்கள் மிகவும் விருப்பமாகவே இருந்தாலும், குறைந்த செலவில் பரப்புரை நடத்தும் தோழர்களின் பொதுக் கூட்ட வரவு செலவுகளுக்குள் பெரியார் தாசனை அடக்க முடியாத நிலை வந்ததால், அவரை வைத்து கூட்டங்கள் நடத்துவது குறைந்தது.

அது மட்டுமல்ல, அனைவரிடமும் அன்பு பாராட்டும் அவர், மறுக்காமல் ஒரே தேதியை ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்களுக்கு தந்துவிடும் போது, எந்த ஊருக்கு அவர் வரப் போகிறார் என்ற குழப்பத்திலும் தோழர்கள் தடுமாறும் நிலை வந்துவிட்டது. இந்த நிலையில் தமிழ்ச் சான்றோர் பேரவையில் தன்னை இணைத்துக் கொண்டு தமிழகம் முழுதும் ஒரு சுற்று வந்தார். அப்போது ஆதி சங்கரர் தத்துவம், மிகவும் முற்போக்கானது; புரட்சிகரமானது என்று 'நந்தன்' பத்திரிகையில் எழுதினார்.

ஒரு கட்டத்தில் பேரவைக் கூட்டங்களும் மெல்ல மெல்ல குறைந்த நிலையில் தன்னம்பிக்கைக்கான கருத்தரங்குகளை ஒரு வர்த்தக நிறுவனத்துக்காக பேசக் கிளம்பினார். தன்னம்பிக்கைப் பிரச்சாரத்தில் தீவிரம் காட்டினார். அப்படித் தன்னம்பிக்கையை விதைத்து வரும்போது, எந்த நிறம் கொண்ட 'கல்லை' நகைகள் வழியாக அணிந்தால், 'ராசி' கிடைக்கும் என்று தொலைக் காட்சியில் 'ராசிக் கல்' பரப்புரையில் இறங்கினார்.

**சேஷாச்சலம் –**
**பெரியார் தாசன் –**
**கவுதமன் –**
**மீண்டும் பெரியார் தாசன் –**
**என்ற அவரது**
**பரிணாம "வளர்ச்சி",**
**'அப்துல்லாஹ்'**
**என்ற கட்டத்திற்கு**
**வந்து சேர்ந்திருக்கிறது.**

பெரியார் தொண்டர்கள், "என்ன, இப்படி, நமது பெரியார் தாசனா?" என்று கேட்டார்கள். ராஜராஜன் என்ற தன்னுடைய நண்பர் ஒருவருக்காக, அப்படி தொலைக்காட்சியில் பேச நேரிட்டது என்றும், அதற்காக என்னை பெரியார் இயக்கம் புறக்கணிக்க வேண்டுமா? என்று வேதனைப்பட்டதோடு, சென்னையில் நடந்த ஒரு கூட்டத்திலும் இதை வெளிப்படையாகவே பேசினார்.

அதன் பிறகு, பெரியாரும், சிங்காரவேலரும் சேர்ந்து தொடங்கிய சுயமரியாதை - சமதர்ம இயக்கத்தை மீண்டும் தொடங்கிவிட்டதாகவும், தான் அதன் பொது செயலாளர் என்றும் கூறி வந்தார்.

பதவி ஓய்வுக்குப் பிறகு மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான ஆலோசனை மய்யங்களைத் தொடங்கி நடத்தி வந்தவர், இப்போது இஸ்லாத்தைத் தழுவிவிட்டதாக அறிவித்திருக்கிறார்.

ஆக, சேஷாச்சலம் - பெரியார் தாசன் - கவுதமன் - மீண்டும் பெரியார் தாசன் - என்ற அவரது பரிணாம "வளர்ச்சி", 'அப்துல்லாஹ்' என்ற கட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது. இப்போது இந்த முடிவுக்கு வந்ததற்கான காரணத்தையும் அவர் கூறியிருக்கிறார்.

அவரோடு 11வது வகுப்பு வரை படித்த பள்ளித் தோழர் சிராஜ்தீன் என்பவரை, 2000 ஆம் ஆண்டில் ஓர் இரவு அவர் சந்தித்துப் பேசினாராம். சிராஜ்தீன் எழுப்பிய கேள்விகள் அவரை அன்று இரவு முழுதும் தூக்கம் வராமல் செய்து விட்டது என்கிறார். அப்படி, பெரியார் தாசனை தூக்கம் வராமல் செய்துவிட்ட 'பொருள் பொதிந்த' கேள்வியையும் பெரியார் தாசன் கூறியிருக்கிறார். "நீ இறை மறுப்பாளனாக பிறக்க வில்லை. இறக்கும் போது இறை மறுப்பாளனாக இறக்கக் கூடாது" என்ற சிராஜ்தீன் சிந்தனைதான், பெரியார்தாசனின் தூக்கத்தைக் கலைத்து விட்டதாம்.

அந்த இரவு - அந்த கேள்விதான் அவரை இறைவன் இருக்கிறான் என்ற நம்பிக்கைக்குக் கொண்டு வந்த மகத்தான இரவு ஆகும். அதன் பிறகு 2004 ஆம் ஆண்டு முதல் கடவுள் மறுப்புப் பிரச்சாரத்தை முற்றாகத் தாம் நிறுத்திக் கொண்டுவிட்டதாக பெரியார் தாசன் கூறுகிறார். ஆனாலும் ஆறு ஆண்டுகள் கழித்து 2010 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி தான், அந்த 'ரகசியத்தை' நாட்டுக்கு வெளியிட்டிருக்கிறார். ஆக, பெரியாரிஸ்டாக இருந்து அவர் இசுலாமைத் தழுவவில்லை. அவர் கடவுள் மறுப்பை விட்டு 6 ஆண்டுகளாகிவிட்டது. கடவுள் நம்பிக்கையாளராக மாறிய பிறகே இசுலாத்தை தழுவியிருக்கிறார்.

"இழிவு ஒழிய இசுலாமே நன் மருந்து" என்று பெரியாரே கூறியிருப்பதாக ஒரு பேட்டியில் பெரியார் தாசன் கூறியிருப்பதால், நாம், சில விளக்கங்களைக் கூற வேண்டியிருக்கிறது. இந்த விளக்கங்கள்கூட, பெரியார்தாசனுக்கு அல்ல.

காரணம், தீண்டாமையிலிருந்து விடுபடுவதற்கு மட்டுமே இசுலாத்திற்கு மாறலாம் என்று பெரியார் கூறியதும், அதுவும், அந்த ஆலோசனை சுயமரியாதை இயக்கத்தினருக்கு அல்ல. தீண்டாமையால் பாதிக்கப்படும் வெகுமக்களுக்குத் தான் என்பதும், பெரியார் தாசன் அறிந்தவர் தான்! *(பெரியாரின் அந்தக் கட்டுரை, இதே இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது)*

இறைவன் இருக்கிறான் என்ற முடிவுக்கு வந்துவிட்ட முன்னாள் பெரியார் தாசன், இனி டார்வின் பரிணாம வளர்ச்சி மற்றும் உயிரியல் கொள்கையை மறுக்க வேண்டும். மார்க்சின் பொருள் முதல்வாதக் கோட்பாட்டைப் பொய் என்று கூற வேண்டும். பெரியாரின் கடவுள் மறுப்பு அர்த்தமற்றது என்றெல்லாம் பேச வேண்டும்.

"1400 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு எழுத்து, ஒரு புள்ளி, ஒரு கமா கூட மாறாமல் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரே வேதம், இறைவனால் நேரடியாக அருளப்பட்ட வேதம், திருக்குர்ரான் தான்" என்று அவர் பேட்டியில் கூறியுள்ளதை நியாயப்படுத்தி விளக்க வேண்டும்.

இப்படி எல்லாம் பேச வேண்டிய சுமையை நமது முன்னாள் தோழர் தமது தோள் மீது சுமக்க வந்திருக்கிறாரே என்ற கவலைதான், நமக்கு! 1400 ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்ட ஒரு கருத்தை, அதை இறைவன், நேரடியாக சொல்லிய ஒரே காரணத்துக்காக 1400 ஆண்டுகால இடைவெளியில் சமூகத்தில் நடந்த மாற்றங்கள், உலகில் நடந்த திருப்பங்கள், விஞ்ஞான வளர்ச்சி, அத்தனைகளையும் ஓரமாக தூக்கிக் கடாசி எறிந்து விட்டு, பெரியார் தாசன் எப்படித்தான், நியாயப்படுத்தப் போகிறாரோ தெரியவில்லை. ஆனாலும் அவர் சமாளிப்பார். இனி மேல் அவர் மதக் கூட்டங்களிலே மட்டும் தானே பேச வேண்டியிருக்கும்? அதனால் பிரச்சினையில்லை. அவர்களிடம் கைதட்டல் வாங்கும் திறமை அவருக்குத்தான் நன்றாக உண்டே! என்ன இருந்தாலும் நல்ல பேச்சாளர் அல்லவா?

ஆனாலும், நமக்கு ஒரு வருத்தம் உண்டு. தனது பிரச்சாரத்தால் பல்லாயிரக்கணக்கான மக்களை பெரியார் கொள்கைக்குத் திருப்பியதாக கூறும் பெரியார் தாசன், இப்போது பெரியார் கொள்கைக்கு விடைக் கொடுத்துத் திரும்பும்போது 'ஒற்றை' தனி மனிதராகத் தானே போக வேண்டியிருக்கிறது என்ற அந்த ஒரு வருத்தம் தான்! வேறு ஒன்றுமில்லை!

**– பெரியாரிஸ்ட்**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# தோழர் கேசவன் இல்ல மண விழா





கழக செயற்குழு உறுப்பினர் எ. கேசவன் - ஜாக்குலின் ஆகியோர் மகள் கே. கலையரசிக்கும், பா. இராசேந்திரன் - இரா. தவமணி ஆகியோர் மகன் இரா. பேரரச னுக்கும் 14.2.2010 ஞாயிறு மாலை 6 மணியளவில் சென்னை நூறு அடி சாலை, அன்னை நகரிலுள்ள மோகன் கார்டன் திருமண மண்ட பத்தில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செய லாளர்கள் கோவை இராமகிருட் டிணன், விடுதலை இராசேந்திரன், கழக மூத்த வழக்கறிஞர் செ. துரை சாமி, பேராசிரியர் சரசுவதி, கழக வழக்கறிஞர்கள் சு.குமார தேவன், வை. இளங்கோவன், இரட்டை மலை சீனிவாசன் பேரவை நட ராசன், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்கினர். கே. திலீபன் வரவேற்புரையாற்ற, மணமக்கள் நன்றி கூறினர்.

கழகத் தோழர்கள் பெரு மளவில் குடும்பத்துடன் வந்திருந் தனர். மணவிழா நினைவாக பெரியார் கருத்துகளடங்கிய 'திராவிடர் திருமணம்' நூல் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இன்று ஏமாற்றி ஓட்டு வாங்கிக் கொண்டு நாளைக்கு எந்த ஊர் என்று கேட்டால் அதற்கு யார் என்ன செய்ய முடியும்?

ஆகவே தீண்டாமை விஷயத்தில் இவ்வித குழப்பம், இருவித அருத்தம், சமயம் போல் திருப்பிக் கொள்ளும் சௌகரியம் ஆகியவைகள் இல்லாத மதமே தீண்டாமையை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பவர்களுக்கு ஏற்றதாகும் என்பது நமது அபிப்பிராயம்.

வெகு நெருக்கடியான சமயத்தில் அம்பேத்கர் இடமும், சிவராஜு இடமும் கையெழுத்து வாங்கிக் கொண்டு பொது ஜனங்களிடம் லட்சக்கணக்கான பணமும் வசூல் செய்து கொண்டு அதைச் செலவழித்து எலக்ஷனில் வெற்றியும் அடைந்து கொண்டு கடைசியில் தீண்டாமை விலக்கு சம்பந்தமாக சட்டம் செய்ய முடியாது என்று சொன்னவர்கள் தானே இன்று அம்பேத்கர் வேறு மதத்துக்குப் போகிறாரே என்று வயிற்றில் அடித்துக் கொள்ளுகிறார்கள்?

இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு அனுகூலம் செய்ய சில தீவிர சுயமரியாதைக்காரர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் அம்பேத்கர் வேறு மதத்துக்கு போவதை அனுமதிக்கக் கூடாது என்றால் அது நியாயமாகுமா? அல்லது ஒன்றும் பேசாமல் சும்மா இரு என்பதுதான் நியாயமாகுமா?

இதையெல்லாம் கவனித்தால் ஒரு காரியமும் செய்ய முடியாது. ஆதலால் அம்பேத்கருடைய முடிவை நாம் மனமார ஆதரிப்பதுடன் அம்முடிவுப்படி சரியான செயலுக்கு நம்மாலான உதவியளிக்க வேண்டியதும் ஒவ்வொரு சுயமரியாதைக்காரருடையவும் கடமையாகும் என்பது நமதபிப்பிராயம்.

**குடி அரசு, தலையங்கம் 17.11.1935**

# வாஞ்சிநாதன் மணிமண்டபம்: வீரமணியின் மவுனம்

வாஞ்சிநாதனுக்கு மணி மண்ட பம் கட்டுவதாக தி.மு.க. ஆட்சி நிதி நிலை அறிக்கையில் அறிவித்துள்ளது. வாஞ்சிநாதன் ஆஷ் துரையை சுட்டுக் கொன்றதற்குக் காரணமே அந்த அதிகாரி சனாதன இந்து தர்மத்துக்கு எதிராக செயல் பட்டார் என்பதால் தான். இதைக் கடிதமாகவே வாஞ்சி எழுதி வைத்திருந்தான்.

அண்ணா -1967 இல் முதல்வர் ஆன வுடன், வாஞ்சிநாதன் மனைவிக்கு தியாகி பென்ஷன் தர முன்வந்தபோது, பெரியார் எதிர்த்தார். விடுதலையும் அண்ணாவின் அறிவிப்பை எதிர்த்து எழுதியது.

இப்போது வாஞ்சி நாதனுக்கே மணிமண்டபம் கட்டும் அறிவிப்பு வந்தபோது வீரமணி ஒரு வார்த்தை கண்டிக்கவில்லை. நிதிநிலை அறிக்கையை வார்த்தைகளால் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருக்கிறார். இதுதான் பெரியார் தந்த புத்தியோ?

# பவானியில் பெரியார் பிறந்த நாள் விழா




ஈரோடு மாவட்டம் பவானி நகரத்தில் 1.3.2010 அன்று கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் 131வது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் மாலை 6 மணிக்கு ஈரோடு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி தலைமையில், ஈரோடு மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், பவானி நகரத் தலைவர் மு. ஈசுவர மூர்த்தி, செயலாளர் பா. சிபழனிச்சாமி, நாமக்கல் மாவட்ட செயலாளர் சாமிநாதன் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சென்னிமலை ஆசிரியர் சுப்ரமணியனின் தமிழிசை நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, குடந்தை சிற்பிராசனின் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பின்னர் தலைமை கழகப் பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி நகைச்சுவை உணர்வுடன் மூட நம்பிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். நடைபெற்ற இந்த சிறப்பான கூட்டத்திற்கு குமாரபாளையம், அந்தியூர், கோபி, திருச்செங்கோடு, குருவை பகுதியிலிருந்து ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

## வந்த கடிதம்

மார்ச் 11 ஆம் தேதி இதழில் வெளி வந்த 'கடவுள் இல்லை' தலையங்கம் மிக அருமை. மதங்கள் காலாவதியாகி விட்ட தையும், அரசும், சட்டங்களும் மக்களை ஆட்சி செய்யும் நிலையில், காலத்துக்கு பொருந்தி வராத, மதங்களின் விதிகளை மக்கள் நம்புவதால்தான், சாமியார்களின் பிடியில் வீழ்கிறார்கள் என்பதையும் தலையங்கம் சிறப்பாக படம் பிடித்துக் காட்டியிருந்தது, எனக்கு புதிய சிந்தனை வெளிச்சத்தைத்தந்த தலையங்கம்.

**– குயில்தாசன், சோலையார்பேட்டை**

'புரட்சிப் பெரியார் முழக்கம்' 11.3.2010 இதழ் கண்டேன். சென்னை மாவட்ட பெரியார் தி.க. சார்பில் 8.3.2010 அன்று அயன்புரத்தில் நடந்த கூட்டத் தில் பெரியார் வலியுறுத்திய பெண் ணுரிமைக் கருத்துகளை குடும்பத்தில் பின்பற்றி வாழ்வியலாக்குவோம் என்று தோழர்கள் உறுதி ஏற்ற செய்தியைப் படித்து மிகவும் மகிழ்ந்தேன்.

**தங்க. சங்கரபாண்டியன்,**
**மணலிபுது நகர், சென்னை.**

11.3.2010 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழில் 'கடவுள் இல்லை' என்ற தலையங்கத்தில் சாமியார்களின் லீலைகளைப் பற்றியும், அவர்களின் நடத்தை நெறிமுறைகளைப் பற்றியும் நித்தியானந்தன், காஞ்சி தேவநாதன், காஞ்சி சங்கராச்சாரி இவர்களின் படுக்கை அறை பதிவுகளை வெளி யிட்டு, சாமியார்களிடம் தமிழக மக்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண் டும் என்பதை தெளிவாக எடுத்துக் கூறி உள்ளீர்கள், பாராட்டுக் குரியது.

'கழுதைக்கு புரோகிதம்' என்ற கட்டுரையில் காதலர் தினத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இந்து முன்னணி யினருக்கு இந்து மத திருமணத்தில் என்ன மந்திரங்கள் சொல்லப்படு கின்றன என்பதையும், அதற்கு பொருள் என்ன என்பதையும், அது தமிழனை எவ்வளவு இழிவு படுத்து கிறது என்பதையும் தெளிவாகவும், அற்புதமாகவும் சொல்லியுள்ளீர்கள்.

**க.சொ. சிவசுப்ரமணியன்,**
**வடசேரி, தஞ்சை.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 25th March 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.